விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 12 புதன்கிழமை (24.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 67

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

# யாழில் பாதுகாப்பு நடைமுறைகள் விரைவில் முற்றாக தளர்த்தப்படும்

## யாழ். கட்டளைத்தளபதி உறுதி



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது அமுலிலுள்ள உயர் பாதுகாப்பு வலயம் உட்பட பாதுகாப்பு நடைமுறைகளை முற்றாகத் தளர்த்தி தென்பகுதி மக்கள் போன்று இங்கும் மக்களின் சுதந்திரமான வாழ்வை ஏற்படுத்துவேன் என யாழ்ப்பாண புதிய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். இது தொடர்பில் அடுத்த சில தினங்களில் ஜனாதிபதி தலைமையிலான பாதுகாப்பு சபையுடன் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்துவேன் எனவும் அவர் குறிப்பிட்டார். (16ஆம் பக்கம் பார்க்க)

## 19 மாவட்டங்களுக்கான வேட்பாளரை ஐ.ம.சு.முன்னணி பூர்த்தி செய்துள்ளது

(கொழும்பு)

ஐ.ம.சு.முவின் 19 மாவட்டங்களுக்கான வேட்பாளர் பட்டியல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு எஞ்சியுள்ள யாழ்ப்பாணம். வன்னி மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கான வேட்பாளர் பட்டியல்கள் இன்று பூர்த்தி செய்யப்பட உள்ளதாக முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

ஏனைய மாவட்டங்களுக்கான வேட்புமனுக்கள் மாவட்ட முதன்மை வேட்பாளர்களினால் சுபநேரத்தில் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

காலி மாவட்ட வேட்பாளர் பட்டியல் காலி மாவட்ட முதன்மை வேட்பாளர் அமைச்சர் பியசேன கமகேயினால் நேற்று கையளிக்கப்பட்டது. மட்டு. மாவட்ட வேட்பாளர் பட்டியல் மட்டு. மாவட்ட முதன்மை வேட்பாளர் அமைச்சர் அமீர் அலியினால் 25ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி நேற்று யாழில் வேட்புமனுத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் நாடாளுமன்ற தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பு நேற்று வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளது. கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தனுடன் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்த அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.கைலேஸ்வர ராஜா பிற்பகல் 1.20 மணியளவில் யாழ். தேர்தல் செயலகத்தில் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

இந்த வேட்புமனுவில் நான்கு பெண்களும் எட்டு ஆண்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். முதல்முதலாக யாழ். மாவட்டத்தில் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பு போட்டி இடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனிடையே யாழ். செயலகத்திற்கு சென்றிருந்த பிள்ளையான் வாகனத்திலிருந்து இறங்காது வாகனத்திலேயே காத்திருந்தார். கட்சியின் பொதுச் செயலாளர் மட்டுமே வேட்புமனுத் தாக்கல் செய் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா மீதான விசாரணை தொடர்பில் அமெரிக்கா அதிருப்தி

(கொழும்பு)

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் விடயத்தில் பின்பற்றப்படும் சட்ட நடைமுறைகள் குறித்து அமெரிக்கா மீண்டும் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் உரிய நீதி நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என அமெரிக்காவின் ஆசிய பிராந்தியத்திற்கான பிரதி இராஜாங்க செயலாளர் றொபேட் ஓ பிளேக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவை பொறுத்தவரை சரத் பொன்சேகா தொடர்பான அனைத்து விடயங்களும் இலங்கையின் சட்ட வரையறைக்குள் நடத்தப்பட வேண்டும்.

சரத்பொன்சேகாவின் கைது மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையானது நீதி விரோதமானது என இலங்கையின் பௌத்த பிக்குகளும் கருத்துரைத்துள்ளமையை றொபேட் ஓ பிளேக் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொன்சேகா (16 ஆம் பக்கம் பார்க்க)

## இந். அரசாங்கத்துடன் இணைந்து கூட்டமைப்புச் செயற்படவில்லை

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றது என்ற சிறிகாந்தா மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோரின் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சொந்தமான நிகழ்ச்சி நிரல் ஒன்று உள்ளது. அதன்படி நாங்கள் ஒன்றிணைந்து செயற்படுகி றோம். நாமும் இந்திய அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்படுவதற்கு தயாராகவுள்ளோம். ஆனால் தமிழ் மக்களுடைய பிரச்சினை முடிபுக்கு கொண்டு வருவதற்குரிய திட்டங்களுடன் செயற்படவேண்டும்.

நாம் இந்தியாவுக்கு சென்று புலிகளுக்கும் அரசுப் படைகளுக்குமிடையில் இடம் பெற்ற யுத்தத்தில் அகப்பட்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த மக்களை காப்பாற்றுவதற்கு கோரினோம். (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் காங்கிரஸ் தனித்துப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி பொதுத்தேர்தலில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பொதுச்செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை முதன்மை வேட்பாளராகக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பத் மினி சிதம்பர நாதன், கஜேந்திரகுமார் உட்பட பிரபலமான புத்திஜீவிகளும் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

# பொன்சேகாவை விடுதலை செய்யக் கோரிய மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது

(கொழும்பு)

அரசினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

பொன்சேகாவின் துணைவி அனோமா பொன்சேகா தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே நீதிமன்றம் இவ் உத்தரவை வழங்கியுள்ளது.

பொன்சேகா மீதான விசாரணைகள் தற்போது இடம் பெற்று வருவதினால் அவரை பிணையில் விடுதலை செய்ய முடியாது என சட்டமா அதிபர் மொகான் பீரிஸ் உயர் நீதி மன்றத்திற்கு எடுத்துக் கூறினார்.

பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டாம் என்ற சட்டமா அதிபரின் கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு பொன்சேகாவை பிணையில் விடுதலை செய்யுமாறு விடுத்த கோரிக்கையை நிராகரித்தது.

பொன்சேகா சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சீ.வி.அஜீத், சந்தேக நபராக மாத்திரம் இருக்கும் நிலையில் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக உரிமை தவிர்க்கப்படுவதாகவும் அதனால் பெரும் அநீதி இழைக்கப்படுவதாகவும் நீதிமன்றத்திற்கு எடுத்துக் கூறினார். எனினும் எதிர்வரும் 26ஆம் திகதி விசாரணை மேற்கொள்ள நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

பொன்சேகாவின் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்தபோது ஏற்றுக் கொண்ட விசாரணைக்குழுவில் இருந்த எந்தவொரு நீதிபதிகளும் நேற்று நடந்த விசாரணையில் கலந்து (16 ஆம் பக்கம் பார்க்க)

## பேசும் படம்



அரைசாண் வயிற்றுக்காக....

# வன்னி மாவட்டத்தில் சிங்களக்கட்சி போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு ஜாதிக பெரமுன என்ற கட்சியும் நேற்று வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளது. இக்கட்சி தென்பகுதி சிங்கள அரசியல் கட்சியாகும். வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு இதுவரை மூன்று அரசியல் கட்சிகள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-9)


# கொமர்ஷல் வங்கி

**யாழ். மண்ணில் முதல் முதலாக புதியதோர் அறிமுகம்!!!**

எதிர்வரும் 25,26,27ஆம் திகதிகளில் நடைபெற இருக்கும் 'வடக்கின் போர்' கிரிக்கற் போட்டியினை முன்னிட்டு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் தரித்து நிற்கும் எமது

## "நடமாடும் ATM வாகனம்"

மூலம் பணத்தினை மீளப்பெற முடியும் என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

**பெற்றுக் கொள்ளக்கூடிய மேலதிக சேவைகள்...**

- புதிய கணக்குகளை ஆரம்பித்தல்
- வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு (NRFC) ஆரம்பித்தல்
- மற்றும் ஏனைய சேவைகள்

COMMERCIAL BANK

(R-4492)


# மரண அறிவித்தல்

## திருமதி விமலராணி காங்கேயநாதன்



சித்தன்கேணி குமரக்கோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட அமரர் திருமதி விமலராணி காங்கேயநாதன் 21.02.2010 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் பொன்னுச்சாமி காங்கேயநாதன் (மின் பொறியியலாளர்) அவர்களின் பாசமிகு மனைவியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.02.2010 புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

'குமரக்கோட்டம்'
சித்தன்கேணி.
021 321 7878

தகவல்:-
குடும்பத்தினர்.

(485)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கொழும்பு மற்றும் உள்ளூர்களில்நடைபெறவுள்ள போட்டிகளில் நடுவர்களாக கடமை புரிய உள்ளவர்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட உள்ளதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு செயலாளர் எம்.பேட்டி பனிஸ்ரர் அறிவித்துள்ளார். (ச)


## அம்பிகை திருமண பொருத்துநர்

உள்நாடு, வெளிநாடு உட்பட டாக்டர், என்ஜினியர், ஆசிரியர், சிறுதொழில் பார்ப்போர், வியாபாரிகள் உட்பட பொருத்தமான மணமகன், மணமகள் எம்மிடம் உண்டு.

அத்துடன் ஆண், பெண் இருவர் சாதகமும் பொருத்தம் பார்த்தும் எழுதிக் கொடுக்கப்படும். சாதக கொப்பி எழுதிக் கொடுக்கப்படும்.

T.P:- 021 7902151
077 4103597

அம்பிகை திருமண பொருத்துநர்,
கீரிமலை வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

உரிமையாளர்:-உதயகுமார் லலிதாம்பிகை. (C-4465)


# புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலைய பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சனசமூக நிலை மண்டபத்தில் நடைபெற்றது.

பொதுக் கூட்டத்தில் 2010ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. நிர்வாகசபையின் தலைவராக ஞா.அனுசனும், செயலாளராக நி.ஜீவகாந்தும், பொருளாளராக கு.கேதீசனும் தெரிவு செய்யப்பட்டனர். இதேவேளை வாகீஸ்வரி விளையாட்டுக்கழக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ச-14)


## தேவை

பழைய காட்போட் 1Kg 5/=, பழைய பிளாஸ்டிக் கதிரை கிலோ 20/=, கொப்பி, புத்தகங்கள், பத்திரிகைகள் கூடிய விலைக்கு வாங்கப்படும்.

நிஹோன் டிரேடர்ஸ்
வைத்தீஸ்வரா பாடசாலைச் சந்தி,
204,மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (435)

## கோகுல் ரவல்ஸ் Hokul Travels

திருமண வைபவங்களுக்கான குளிரூட்டப்பட்ட சொகுசு கார், வான் மற்றும் பஸ் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:-
021 222 8984, 077 3747825, 077 6152992

(C-4449)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com

## Learn French the French Way French Classes

சர்வதேச மொழியான **French** மொழி யாழ்ப்பாணத்தில் French Embassy இன் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.
எங்களுடைய நூலகத்தை மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.
விரிவுரையாளர்கள்; பிரான்ஸியரும், பிரெஞ்சில் தகைமை பெற்றோர்களும்.
*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*
அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(486)

யாழ். மக்கள் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
வலம்புரியின்

## திருமண தரிசனம்

உங்கள் வலம்புரியில் ஞாயிறு தோறும் வெளிவரும்.
எங்கள் உறவுகளின் வெளிநாட்டு தொடர்புக்காக இணையத்தளத்திலும் திருமண தரிசனம் வெளிவரும்.

அன்பார்ந்த பெற்றோர்களே! உங்கள் பொறுப்பை இலகுவாக்க வலம்புரியின் சேவையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்பு:
நேரில்
இல. 3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

## தேவை

கணனி தட்டெழுத்தாளர்

அச்சகம் ஒன்றில் வேலை செய்வதற்கு கணனி தட்டெழுத்தாளர் உடன் தேவை. நேரில் வரவும்.

எஸ்.எஸ்.ஆர்.பிறின்டேஸ்
72,பலாலி வீதி,
திருநெல்வேலி. (481)

## விற்பனைக்கு

கோப்பாய் பூதர்மடத்தடியில் பருத்தித்துறை வீதிக்கு அருகாமையில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொலைபேசி:-
071 5619506
(488)

## தவறிவிட்டது

34/1A,மயிலணி சுன்னாகம் என்னும் இடத்தைச் சேர்ந்த ரஜதகிரீசன் அன்னபூர்னேஸ்வரி இல.898442713V தேசிய அடையாள அட்டை சுன்னாகத்திற்கும் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேலே உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தயவாக கேட்டுக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (480)

# இன்று ஒரு தகவல்

## இதமும் பிரியமும்

"இதோ இருக்கிறாரே... இவர் ரொம்பவும் இதமாகப் பேசக் கூடியவர்" என்று ஒருத்தரை அறிமுகப்படுத்தினார் ஒரு நண்பர்.

"இதோ இவர் ரொம்பவும் பிரியமாகப் பேசக் கூடியவர்" என்று இன்னொருவரையும் அறிமுகப்படுத்தினார்.

இவர்கள் இரண்டு பேருக்கும் என்ன வித்தியாசம்? இப்பொழுது உங்களோடு நான் பேசுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்குக் கேட்பதற்கு எது இன்பமாக இருக்குமோ அதைச் சொல்லுவது பிரியம்! அதாவது உங்களுக்கு எதைச் சொன்னால் பிடிக்குமோ அதைச் சொல்வது பிரியம்.

ஒரு ராஜாவுக்கு ஆலோசனை சொல்லும் அமைச்சர்கள் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? இதமாகச் சொல்பவர்களாக இருக்க வேண்டும். பிரியமாக பேசுபவர்களாக இருக்கக் கூடாது.

ஒரு அரசனிடம் பேசும் போது அவனுக்கு எது நன்மையோ அதைச்சொல்ல வேண்டும்.

ஆனால், எல்லோரும் என்ன செய்வார்கள் தெரியுமா? ஒரு அரசனுக்கு என்ன பேசினால் பிடிக்குமோ அதைப் பேசுபவர்களாகத்தான் இருப்பார்கள்.

ஏன் அப்படிச் பேசுகிறீர்கள் என்று கேட்டால் அப்படிப் பேசினால் தான் எங்களுடைய சம்பளத்தை உயர்த்துவார் என்று சொல்வார்கள்.

'இதம்' என்பது பலசமயங்களில் கசப்பாகத்தான் இருக்கும். அதனால் அதைச் சொல்பவர்களை யாருக்கும் பிடிக்காது.

அதனால் தான் விபீஷணனை இராவணுக்குப் பிடிக்காமல் போனது.

அன்றைக்கு என்ன நடந்தது.... இராவணன் தன்னுடைய அமைச்சர்களையெல்லாம் கூப்பிட்டு ஆலோசனை கேட்டான். ஆனால் அவர்கள் நல்ல ஆலோசனை சொல்லவில்லை.

இராவணனுக்கு எதைச் சொன்னால் பிடிக்குமோ அதைச் சொன்னார்கள்.

"சீதையை நீயே வைத்துக் கொள்- இராமனை நாங்கள் கொன்று விடுகிறோம்" என்றார்கள். ஆனால் விபீஷணன் என்ன சொன்னான் தெரியுமா?

"தனியாக நின்று இராமனை நாம் ஜெயிக்க முடியுமா?

அதனால் சீதையைத் திருப்பிக் கொடுத்துவிட்டு அவனிடம் மன்னிப்புக் கேள்" என்றான்.

இந்த இதம் இராவணனுக்கு கசப்பாக இருந்தது. விபீஷணன் சொன்ன வார்த்தைகள் இராவணனிடம் எடுபடவில்லை.

நம்மிடம் யாராவது வந்து ஒரு யோசனை சொன்னால் கூட அந்த யோசனைக்குப் பின்னால் இருப்பது இதமா? பிரியமா? என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நல்ல யோசனை நமக்குப் பிடிக்கவில்லையென்றால் கூட அதை நாம் அலட்சியப்படுத்தக் கூடாது .

ஒரு ராஜா இருந்தார். அவரிடம் பிரியமாகவும் இதமாகவும் பேசக் கூடிய அமைச்சர் ஒருவரும் இருந்தார்.

ஒரு நாள் இரவு எதிரி நாட்டு மன்னன் வந்து அரசியைத் தூக்கிக் கொண்டு போய் விட்டான். அதாவது சிறையெடுத்து விட்டான்.

இது தெரிந்ததும் அமைச்சர் உடனே ராஜாவிடம் சொல்வதற்கு ஓடிவந்தார்.

"அரசே! அந்நிய நாட்டு மன்னன் அரசியை தூக்கிக் கொண்டு போய்விட்டான். என்ன செய்யலாம்?"

"உடனே அந்த பகை மன்னனை எங்கிருந்தாலும் கண்டு பிடித்துக் கொண்டு வாருங்கள்!"

"ஏன்?"

"அவனுக்குப் பாராட்டுவிழா நடத்தி பத்தாயிரம் பொற்காசுகள் பரிசு கொடுத்தனுப்ப வேண்டும்".

தென்கச்சி கோ சுவாமிநாதன்

## பட்டதாரி ஆசிரியர்களுக்கான பதவியுயர்வும் மீளாய்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் 06-10-94 ஆம் திகதியின் பின் சேவையில் உள்ள போது பட்டம் பெற்ற ஆசிரியர்களும் நியமனத்தின் போது பட்டச் சான்றிதழ் பெற்றிருந்தும் பட்டதாரி நியமனம் வழங்கப்படாத ஆசிரியர்களும் யாழ். வலயக் கல்வி அலுவலகத்திற்கு நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சமூகமளித்து பதவியுயர்வும் மீளாய்வுக்குமான விண்ணப்பங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடன் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (6-4)

## மிதிவெடி விழிப்புணர்வு நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

சொண்ட் நிறுவனம், யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டுவரும் மிதிவெடி விழிப்புணர்வு நாடக ஆற்றுகையில் தெல்லிப்பழைப் பிரதேசத்திலுள்ள யூனியன் கல்லூரி மற்றும் மகாஜனாக் கல்லூரி மாணவர் களுக்கான விழிப்புணர்வு நாடக ஆற்றுகை இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

மேலும் இந்நிறுவனம் தீவுப் பகுதிகளில் உள்ள கிராமங்களிலும் பாடசாலைகளிலும் நாடக ஆற்றுகையினை அளிக்கை செய்து வருவதாக எம்.ஆர்.ஈ. திட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (6-4)

## இராசி பலன்

24-02-2010 (மாசி 12, புதன்கிழமை)
தசமி முற்பகல் 10.11 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 12.42 மணிவரை
இராகுகாலம் 12.30 -2.00 மணிவரை
சுபநேரம் 5.00 -6.30 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சகோதரர் உதவி , வாக்கு மேன்மை , காரிய சித்தி , விருந்துபசாரம். |
| இடபம் | முயற்சி தாமதம் , குடும்பக் கவலை , அதிகாரம் , சுபசெய்தி. |
| மிதுனம் | நண்பர்கள் சந்திப்பு , புதிய முயற்சி , தன்னம்பிக்கை , தெய்வசிந்தை. |
| கடகம் | காரிய அலைச்சல் , சுபசெலவு , உறவினர் வருகை , மனஸ்தாபம். |
| சிங்கம் | குடும்ப மகிழ்ச்சி , காரிய நன்மை, நல்ல செய்தி , தேகநலன். |
| கன்னி | தெய்வசிந்தை , முயற்சி கைகூடும் , தன்னம்பிக்கை , அதிகாரம். |
| துலாம் | புதிய திட்டமிடல், இடமாற்றம், ஆரோக்கியக்குறைவு, தனவிரயம். |
| விருச்சிகம் | வீண்பகை, முயற்சி தாமதம், போசனசுகம், பணக்குறைவு. |
| தனுசு | செய்தொழில் விருத்தி, செல்வாக்கு, முயற்சி கைகூடும், தனலாபம். |
| மகரம் | எடுத்த காரியம் கைகூடும், பாராட்டு, போசன சுகம், தொழில் மேன்மை. |
| கும்பம் | வியாபார நன்மை, ரோகநிலை, முயற்சி தாமதம், மனஸ்தாபம். |
| மீனம் | சுப செலவு, கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம், நண்பர்கள் சந்திப்பு. |

வளவன்

## இந்து அமைப்புக்களின் ஒன்றியம் நடத்தும் மாதாந்த முழுநிலா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து அமைப்புக்களின் ஒன்றியம் நடத்தும் மாதாந்த முழுநிலா கருத்தரங்கும் கலைநிகழ்வும் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளதுடன் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மேலும் நாவலர் காட்டிய் சைவ வாழ்வியல் என்னும் விடயம் பற்றி சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் சிறப்புச் சொற்பொழிவும் ஆசிரியர் க. பற்குணநாதனின் நெறியாழ்கையில் பெருமூச்சு நாடகமும் நடைபெறவுள்ளது. (6-4)

## இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் கூடுதல் தொழில் வாய்ப்பு

இலங்கையர்களுக்கு இஸ்ரேல் கூடியளவில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கான உடன் படிக்கை ஒன்றில் இலங்கையும் இஸ்ரேலும் கைச்சாத்திடவுள்ளனர்.

இலங்கையர்களுக்குக் கூடுதலான தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு இஸ்ரேல் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தும் நோக்கில் இஸ்ரேலில் இருந்து சிரேஷ்ட அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

இஸ்ரேலில் விவசாயத் துறையிலேயே கூடுதலான தொழில் வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அத்துறையில் இலங்கையர்களுக்கு அதிக தொழில் வாய்ப்புக்களை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப் படுவதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (6-4)

## விண்வெளியில் புதிய சூரியன் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

விண்வெளியில் சூரிய குடும்பத்துக்கு அப்பால் பல்வேறு சூரியன்களும் அதன் துணை கிரகங்களும் உள்ளன. அவற்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து வருகின்றனர்.

தற்போது புதிதாக ஒரு சூரியனைக் கண்டுபிடித்துள்ளனர். இதற்கு பிடி+20 1790 பி என பெயரிடப்பட்டுள்ளனர். இது ஜுபிடர் கிரகத்தைவிட 6 மடங்கு பெரியது.

இது சூரியனின் சுற்றுப் பாதையில் உள்ள மொர்குரி கிரகத்துக்கு மிக அருகில் உள்ளது. இது பூமியில் இருந்து 83 ஒளியாண்டுகள் தூரத்தில் உள்ளது. ஆனால் சூரியனைவிட சிறியது.

இந்த புதிய சூரியன் 3 1/2 கோடி ஆண்டு பழமையானது என்று கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு முன்பு புதிதாக கண்டுபிடித்த கிரகம் 10 கோடி ஆண்டு பழமை வாய்ந்தது என விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர். இந்தப் புதிய சூரிய கிரகம் குறித்து மரிய குருஷ் கால் லெஷ் மற்றும் ஜோன்பர்னஸ் தலைமையிலான சர்வதேச விண்வெளி விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டுள்ளனர். (6-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 110 |
| தக்காளி | 60 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 60 | 70 | 60 |
| கரட் | 80 | 90 | 100 |
| பூசணி | 40 | 50 | 55 |
| புடோல் | 60 | 70 | 65 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 45 | 55 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 70 |
| பாகற்காய் | 120 | 130 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 90 | 80 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 110 |
| லீக்ஸ் | 60 | 70 | 80 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 80 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 380 | 380 | 250 |
| போஞ்சி | 80 | 90 | 70 |
| கத்தரி தம்புள்ள | 50 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 40 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# பொன்சேகாவுக்காக தலதா மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பூசைக்கு அரசு தடைவிதிப்பு

(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் விடுதலைக்கு ஆசி வேண்டி நேற்று முன்தினம் தலதாமாளிகையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பூசைக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இந்த விசேட பூசையை பௌத்த இளைஞர் சமூகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

எனினும் நேற்று முன்தினம் மாலை நடத்தப்படவிருந்த பூசையை நடத்த வேண்டாம் என பூசை ஏற்பாட்டாளர்களிடம் பொலிஸார் பகிரங்கமாக வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பொது பூசைகளை நடத்துவதற்கு யாருடைய அனுமதியையும் கோர வேண்டிய அவசியம் இல்லை என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்த போதும் அதனை மேற்கொள்ள விடாது பொலிஸார் தடுத்தாக தெரிகிறது.

அத்துடன் அவர்களிடம் நாகரீகம் அற்ற விதத்தில் பொலிஸார் நடந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் ஒழுங்கு செய்யப்பட் டிருந்த பூசை தலதா வீதியிலேயே மேற் கொள் ளப்பட்டதாக கூறப்படுகிறது.

இதில் சரத்பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகாவும் கலந்துகொண்டிருந்தார். (6)

## ஆண்டுப்பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் ஆண்டு பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நிதியத்தின் தலைவர் மு.காசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் க. அருணாசலம் அறிவித்துள்ளார். (4-29)

# பகல் தூக்கம் மூளையின் செயல்திறனை அதிகரிக்கும்

## ஆய்வில் தகவல்

(லண்டன்)

பகல் நேரத்தில் தூங்குவது உடல் நலத்திற்கு தீங்கானது என்ற கருத்து பரவலாக உள்ளது.

தற்போது பகலில் சிறிய தூக்கம் போட்டால் மூளையின் செயற்பாடு அதிகரித்து அறிவுதிறன் வளரும் என ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இதற்கான ஆய்வை பெர்கலியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மேற்கொண்டனர். தொடக்கத்தில் இவர்கள் 39 பேரிடம் ஆய்வை மேற் கொண்டனர்.

இரவு நேரத்தில் அவர்களை நன்றாக தூங்கவைத்து விட்டு காலையில் நீண்ட நேரம் படிக்க வைத்தனர் .

அதே வேளையில் சுமார் 20 பேரை பகலில் 90 நிமிட நேரம் மட்டும் சிறிய அளவில் தூங்க வைத்தனர்.

பின்னர் இருதரப்பினரதும் செயல்திறன் பரிசோதிக்கப்பட்டது. இதில் பகலில் சிறிது நேரம் தூங்கியவர்களின் மூளை செயல்பாட்டு திறன் அதிக அளவில் இருந்தது.

இந்த சோதனை தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டது. இருந்தாலும் இதே முடிவு தான் கிடைத்தது.

இந்த ஆய்வறிக்கை கலிபோர்னியா வில் நடந்த விஞ்ஞானிகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது. (6)

# அனுமதிகிடைத்த பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதே உகந்தது

## தேசிய பாடசாலைகளின் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் வகுப்பில் அனுமதி கிடைத்தும் தமது பிள்ளைகளைச் சேர்க்கச் சில பெற்றோர்கள் முன்வருவதில்லையென கல்வி அமைச்சு குற்றஞ் சாட்டுகிறது.

மேலும் பிரபல பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்க்கும் எதிர்பார்ப்பில் பல பெற்றோர்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பாமல் வீட்டில் வைத்திருப்பதாகக் கல்வி அமைச்சு கூறுகிறது.

இந்த வருடம் நாட்டில் உள்ள சகல தேசிய பாடசாலைகளிலும் பிள்ளைகளை முதலாம் வகுப்பில் அனுமதிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்ற வெற்றிடங்களும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாகவும் தேசிய பாடசாலைகளின் பணிப்பாளர் ஸ்ரீலால் நோனிஸ் தெரிவித்தார்.

கல்வி அமைச்சுக்குச் செல்வதாலோ வலயக் கல்வி அதிகாரிகளைச் சந்திப்பதாலோ எவ்வித பலனும் ஏற்படாதென அவர் மேலும் கூறினார்.

எனவே கிடைக்கப்பெற்றுள்ள பாடசாலைகளில் தங்களது பிள்ளைகளைச் சேர்ப்பதே உகந்ததென அவர் குறிப்பிட்டார். (6)

## ஜேர்மனியில் 4 ஆயிரம் விமானிகள் வேலை நிறுத்தம்

(பெர்லின்)

ஜெர்மனியில் ஏர்லைன் லுப்தான்சா விமான நிறுவனம் பிரசித்தி பெற்றது. இதில் சுமார் 4 ஆயிரம் விமானிகள் பணிபுரிகின்றனர். இவர்கள் தங்களுக்கு பணி பாதுகாப்பு வழங்கக்கோரி 4 நாட்கள் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்த வேலை நிறுத்தம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தொடங்கியது . இதனால் 3 ஆயிரம் விமானங்களில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

மேலும் பல விமானங்களின் போக்குவரத்து தாமதமாகவும் நடைபெறுகிறது. எனவே பயணிகள் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.

வேலை நிறுத்த போராட்டம் நாளை 25 ஆம் திகதி வரை நடைபெறுவதால் இதில் டிக்கெட் முன்பதிவு செய்திருந்தவர்கள் வாபஸ் பெற்று வேறு விமானத்தில் பயணம் செய்து வருகின்றனர். (6)

# பாராளுமன்றத் தேர்தலில் ஆகக்கூடுதலான பெரும்பான்மையுடன் ஜனாதிபதி வெற்றி பெறுவார்

# அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறக்கூடிய வகையில் பலம் மிக்க கூட்டணியுடன் அரசாங்கம் எதிர்வரும்



பாராளுமன்றத் தேர்தலில் களமிறங்குகின்றது.

எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்பதாக 22 மாவட்டங்களிலும் வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதுடன் சுபநேரத்தில் நாட ளாவிய ரீதியில் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அரசாங்கம் பின்னடைவைச் சந்தித்து வடக்கு-கிழக்கு மற்றும் மத்திய மாகாணத்தில் சில மாவட்டங்களில் கூடிய கவனம் செலுத்தப்படுவதுடன் பொதுமக்களின் அபிமானத்திற்குப் பாத்திரமாக விளங்கும் கலைஞர்கள், வீரர்கள் போன்ற புதிய முகங்களைத் தேர்தல் களத்தில் அரசாங்கம் இறக்கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு 4-7 இல் அமைந்துள்ள மகாவலி நிலையத்தில் நடைபெற்றது. இதன் போதே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

அம்பாந்தோட்டை மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கான வேட்பு மனுக்களை ஏற்கனவே தாக்கல் செய்துள்ளோம். இலங்கை அரசியல் வரலாற்றில் என்றுமே இல்லாதவாறு இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் புதிய முகம்கள் போட்டியிடவுள்ளன. பெண்கள் பிரதிநிதித்துவம் ஆகக்கூடியவாறு காணப்படுகின்றது.


வன்னி,மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கூடுதலான பெண் வேட்பாளர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்யவுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான தங்கேஸ்வரி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடவுள்ளார்.

இதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மேலும் இருவர் அரசாங்கத்திற்கு வரவுள்ளனர்.

ஆனால் ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. உட்பட எதிர்க் கட்சிகளின் கூட்டணியுடன் உறுப்புரிமை கொண்டிருந்த எதிர்க்கட்சிகள் பிளவுகளைச் சந்தித்துள்ளன. பிரதான எதிர்க் கட்சியான ஐ. தே.க. வினால்வேட்புமனுத் தாக்கல் செய்வதில் சிக்கல் தோன்றியுள்ளது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில்மிக மோசமான முறையில் எதிர்க் கட்சிகள் தோல்வியடையும்.

அத்தோடு ஆகக் கூடுதலான பொது மக்களின் ஆதரவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இலங்கையின் வளமான எதிர் காலத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கும் எனக் கூறினார். (6-4)



சங்குவேலி பூந்தோட்டம் அருள்மிகு ஞானவைரவர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் நிகழ்வில் சங்குவேலி இந்துமாமன்றச் செயலாளர் ப.மகேந்திரதாஸன் ,அகில இலங்கைத் திருமுறை மன்றப் பொருளாளர் க.கு.க.சிவபாலன் , சி. ஸ்ரீ. ஜெகநாதன் , அகில இலங்கைத் திருமுறை மன்றத்தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் ஆகியோரைப் படத்தில் காணலாம்.


Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Feb.2010 To July 2010

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2010

# பொன்சேகாவை சிறையிலடைத்தது போதாதென்று தூக்குமேடைக்கு அனுப்ப ஜே.வி.பி. கூட்டணி முயற்சி

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

இராணுவத் தளபதி என்ற கௌரவத்துடன் ஓய்வு பெற்ற ஜெனரல் சரத் பொன்சேகாவை அன்னத்தில் ஜனாதிபதியாக்குவதாகக் கூறி சிறையில் அடைத்தது போதாதென்று கிண்ணத்தில் தூக்குமேடைக்கு அனுப்ப ஜே.வி.பி. கூட்டணி முயற்சி செய்வதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.


பொது மக்களை ஆர்ப்பாட்டச் சூழலில் வைத்துக்கொண்டு தேர்தலில் வெற்றி பெற எதிர்க்கட்சிகள் கடும் முயற்சியில் இறங்கியுள்ளன.

ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் அளவிற்கு மக்கள் ஆதரவு அரசாங்கத்திற்கே இருக்கின்றது என்றும் அவர் சொன்னார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்றது. இதன்போதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற அதேவேகத்துடன் பாராளுமன்றத் தேர்தலை சந்திக்க நேர்ந்தமையானது மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு இலகுவாக அமையும். சமாதானம் பிறந்துள்ள இலங்கையில் நல்லாட்சியை ஏற்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதே தற்போதைய அரசாங்கத்தின் இலக்காகும்.



எதிர்க்கட்சிகள் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாத நிலையிலே எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் களமிறங்குகின்றன.

பெரும்பான்மை மக்களின் ஆதரவைத் துஷ்பிரயோகம் செய்த அரசியல் கட்சிகள் இன்று அரசாங்கத்திற்குக் கிடைக்கப்போகும் வெற்றியை நினைத்து பயந்து போயுள்ளன.

ஜே.வி.பி. மங்கள சமரவீர கூட்டணி ஜெனரல் சரத்பொன்சேகாவை சிறையில் அடைத்தது போதாதென்று கிண்ணம் சின்னத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைத்து அவரை தூக்கில் தொங்கவைக்க முயற்சிசெய்கின்றது. எவ்வாறாயினும் ரணில் விக்கிரமசிங்க எதிர்ப்பார்த்து நடந்து விட்டது.

ஐ.தே.க.வின் ஆதரவை கெஞ்சிப் பெறும் அளவிற்கு ஜே.வி.பி. தாழ் நிலையை அடைந்துள்ளது எனக் கூறினார். (6)

## தவக்கால தியானமும் குணமாக்கல் வழிபாடும்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆயர் இல்ல இறை தியான குழுவினரின் ஏற்பாட்டில் ***மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்*** இந்தியாவின் கேரளா மாநிலத்திலிருந்து வருகை தரும் அருட் திரு. தோமஸ் குழுவினரின் வழி நடத்தலில் தவக்காலத்தியானமும் இறை தியான குணமாக்கல் வழிபாடுகளும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 27 ஆம் திகதி சனிக்கிழமை வரை வழிபாடுகள் பங்கு மட்டத்தில் நடைபெறவுள்ளன.

இதில் இறுதி நாளான எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குணமாக்கல் சிறப்பு வழிபாடு மாலை 5 மணி முதல் 9.30 மணி வரை யாழ். மரியன்னை பேராலய முன்றலில் நடைபெறவுள்ளது. (6-4)

## இலங்கைக்கான பயண எச்சரிக்கையை தளர்த்தியது சவூதி அரேபியா

(கொழும்பு)

இலங்கைக்குச் செல்வது தொடர்பில் நமது நாட்டுப் பிரஜைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கையை சவூதி அரேபியா நீக்கியுள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் குறித்த பயண எச்சரிக்கை அமுலில் இருந்தது.

இலங்கையின் பாதுகாப்பு சூழ்நிலையை கருத்தில் கொண்டு சவூதி அரேபியா இந்த பயண எச்சரிக்கையை விடுத்திருந்தது. ரியாத் திற்கான இலங்கைத் தூதரகம் நிலைமைகளை விளக்கியதன் காரணமாக இந்த பயண எச்சரிக்கையை தளர்த்தியுள்ளது.

மேலும் பயங்கரவாதம் இல்லா தொழிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் காலங்களில் அதிக எண்ணிக்கையிலான சவூதி சுற்றுலாப் பயணிகளை இலங்கையில் எதிர்பார்க்க முடியும் எனவும் அது நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (6)


வெள்ளிவிழாவை முன்னிட்டு

அனைத்து கணினி பாடநெறிகளுக்கும் CSC வழங்கும்

75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை

25 YEARS

மேலதிக விபரங்கள் எமது பயிற்சிமையங்களில்

ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088



முதன் முறையாக யாழ் மாநகரினிலே

BRITISH COLLEGE OF HIGHER STUDIES & Computer Express

ஆகிய இரு நிறுவனங்கள் எம் மக்கள் அனைவரினதும் நன்மை கருதி

அவர்களின் ஆங்கில , கணனி அறிவினை மேம்படுத்துவதற்காக

100 % புலமைப்பரிசில்களுக்கான மாபெரும் போட்டிப்பரீட்சை

இப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் 10 மாணவர்களுக்கு P4 கணனிகள் பரிசாக வழங்கப்படும்.



இப்போட்டிப்பரீட்சைக்கு தோற்றத்தகுதியுடையோர்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், அரச, தனியார்துறையில் வேலை செய்பவர்கள், எதிர்காலத்தில் சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் படிப்பினைத் தொடரவுள்ளோர், ஏனையோர்கள்.

விண்ணப்ப முடிவுத்திகதி 24.02.2010

போட்டிப்பரீட்சையில் ஆங்கிலம், கணனி அறிவினை பரிசோதிக்கும் இரண்டு வினாத்தாள்கள் வழங்கப் படும். இவை ஒவ்வொன்றும் ஒரு மணித்தியால நேர எல்லையைக் கொண்டது ஆங்கில வினாத்தாளில் மாணவர்கள் பெறும் புள்ளிகளிற்கேற்ற வகையில் புலமைப்பரிசினை பெற்றுக்கொண்டு அவர்கள் lower level, Intermediate level, Upper level எனப்பிரிக்கப்பட்டு, அடிப்படையிலிருந்து ஆங்கிலப் பயிற்சியினை British Council நிறுவனத்தின் ஆங்கில கற்கை நெறிகளிற்கு இணையாக நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய Audio, visual முறையில் துறைசார் அனுபவம் மிக்க ஆசிரியர்குழாமினால் பயிற்றுவிக்கப்பட்டு அவர்களுடைய வாழ்வில் வளமான எதிர்காலத்தினை ஆளுமை விருத்தியுடன் அடைவதற்கு 100% உறுதிப்பாடு வழங்கப்படும்.

போட்டிப்பரீட்சையில் கணனிப்பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் பெறும் புள்ளிகளிக்கேற்ற வகையில் அனைத்து Diploma, Advanced Diploma கற்கை நெறிகளில் 100% புலமைப் பரிசினை பெற்றுக்கொள்வதோடு நிகழ்கால தொழிற்துறையில் கணனித் தேவைப்பாட்டிற்கமைவாக அவர்கள் அதிநவீன கணனி ஆய்வுகூடத்தில் நடைமுறையிலுள்ள வினைத்திறன்மிக்க மென் பொருளினூடாக நீண்டகால அனுபவம் மிக்க புலமைசார் விரிவுரையாளர்களால் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பரீட்சை நிலையங்கள்

| | | |
|---|---|---|
| யாழ் மத்திய கல்லூரி | 27.2.2010 | 10.00 - 12.00 |
| இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி | 28.2.2010 | 10.00 - 12.00 |
| நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 28.2.2010 | 10.00 - 12.00 |
| சாவகச்சேரி இந்துக்கல்லூரி | 28.2.2010 | 10.00 - 12.00 |

பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை எமது British College Of Higher Studies, Computer Express நிறுவனங்களிலும் பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு எவ்வித முன்கட்டணமும் அறவிடப்படமாட்டாது

பரீட்சார்த்திகள் கவனத்திற்கு பரீட்சார்த்திகள்/பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் கீழே காணப்படும் விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்து அதன் பிரதியை நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ BCHS அல்லது Computer Expressக்கு அனுப்பிவைப்பதுடன் அதன் மூலப்பிரதியுடன் பரீட்சை நிலையத்திற்கு நேரடியாக சமூகமளிப்பதனூடாக பரீட்சைக்கு தோற்ற முடியும்.

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
Second Floor,
No 15 Sirampiyady Lane,
Off Stanley Road. Jaffna.
Tel: 021 2224550 / 0714299935
0777585913 Email: info@bchs.lk
(ஆரியகுளம்சந்திக்கு அருகில் கொசி Hotel மேல்)

Computer Express
No 167, Kasthuriyar Road,
Jaffna.
Tel: 021 2228250 / 0777222422
(உதயன் பணிமனை அருகாமை நாவலர்சந்தி)

Application Form

Full Name :.................................... Phone No.:....................
Address :.................................... Mail ID :....................
Center :.................................... Date....................
Sex :.................... N.I.C.No.:.................... Signature ....................

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 16

சிங்கையாரியனைக் குறித்துக் கைலாய மாலை சொல்வன:

....நீதியருட் குரிசில் – தீதகலும்
மாகதர்கள் கோசலர் மலாடர் கருநாடர் மிகு
கேகயர்கள் மாளவர்கள் கேரளர்கள் – வாகைபெறு
சோனகர் விராடர் துளுவாதியர்கள் சுர மிகு
சீனரொடு சாவகர்கள் சேதியர்கள் – ஆன வெகு
சேனைபுடை சுழுவய மாவின்மிசை சேனையின்
மானமுடன் மேவுமகராசதுரை – வாகனத் திற்
றூண்டிடினுந் தீயினிடைத் தூண்டிடினு நீரினிடைத்
தூண்டிடினுஞ் செல்லுந் துரகத்தான் – நீண்ட
உரகன்முடி நோவ வுரசரண நாட்டுங்
கரடதட கும்பக் களிற்றான் – முரணிரவி
இட்டதனி யாழி யிரதமிணை யல்ல வெனும்
வட்டமுறு மாழி மணித்தேரோன் – முட்ட ருதாட்
கஞ்சன் படைகள் களம்வரினுங் காத மெதிர்
பஞ்சென நீறாக்கும் பதாதியான் – செஞ் சுடரோன்.

கைலாயமாலை சிங்கையாரியனைப் பற்றி மிகவும் மிகைப்படுத்திக் கூறுகின்றதென்பது முன்கண்ட மேற்கோளினாலே தெளிவாகின்றது. எனினும் தர்க்க ரீதியாக நோக்குமிடத்து பெரு வலிபடைத்த ஒரு சேனையின் தலைவனாகச் சிங்கையாரியன் வட இலங்கைக்கு வந்தான் என்ற உண்மையே கைலாயமாலை சொல்லுங் கதைக்குக் கருவாக அமைந்ததென்பது புலனாகின்றது.

இங்கு ஆரியச் சக்கரவர்த்தியின் படையெடுப்பை நினைவுபடுத்துதல் அவசியமாகின்றது. அந்நிகழ்ச்சி பற்றிச் சூளவம்சம் சொல்வது.

பாண்டிய அரசினை ஆண்ட ஐந்து சகோதரரும் தழிழருட் சிறந்தவனான ஆரியச்சக்கரவர்த்தி என வழங்கிய பேரமைச்சனைப் பெரும்படையுடன் அனுப்பினார்கள்.

ஈழம் வந்ததும் நாட்டின் நாற்புறங்களையும் அழித்துச் சுபகிரி (யாப்பகூவ) என்னும் பலம் மிக்க கோட்டையினுள் நுழைந்து (புத்தரின்) புனித தந்தத்தையும் அங்குள்ள ஏனைய செல்வங்கள் அனைத்தையுங் கொண்டு (ஆரியசக்கரவர்த்தி) பாண்டி நாட்டிற்குச் சென்றான். அங்கு பாண்டிய மன்னர் குலமெனும் தாமரையை மலர்விக்கின்ற கதிரவனையொத்த குலசேகர மன்னவனுக்கு அவற்றைக்கொடுத்தான்.

ஆரியச் சக்கரவர்த்தி பற்றிச் சூளவம்சம் சொல்வனவும் சிங்கையாரியனைப் பற்றிக் கைலாயமாலை சொல்வனவும் பெரிதும் ஒத்திருக்கின்றன. சிங்கையாரியன் பெரும்படையோடு மதுரையிலிருந்து பாண்டியன் வழியனுப்பி வைக்க ஈழத்திற்கு வந்தான் என்பது கைலாய மாலையின் கூற்று. எனவே சூளவம்சத்தில் வரும் ஆரியச்சக்கரவர்த்தியே கைலாயமாலை புகழ்ந்துரைக்கும் சிங்கையாரியன் எனக் கொள்ளலாம். யாழ்ப்பாணமன்னர் அனைவரும் சிங்கையாரியன் ஆரியச் சக்கரவர்த்தி என்னும் விருதுகளைக் கொண்டிருந்தமையும் இம்முடிபை வலியுறுத்தும்.

வரோதய சிங்கையாரியன் என்ற மன்னன் காலத்தில், அவனது உறவினனாகிய சோமசர்மன் என்ற அந்தணன் எழுதிய செகராசசேகரமாலையும் வரோதய சிங்கையாரியனின் முன்னோர்கள் பாண்டியாரின் தளபதிகளாகவிருந்து திறன்மிக்க சேவைபுரிந்தன. ரென்றுரைக்கின்றது. அவ்வரசனின் முன்னோருள் ஒருவன் அந்தரவல்லி என்னுமிடத்தில் நடந்த போரிற் தன்னை எதிர்த்து வந்த கொடிய போர் யானையைக் கொன்று போசல (கன்னட) வேந்தனைத் தோற்கடித்தான் எனவும் வேறொருவன் பண்டிய மன்னரது ஆட்சியாவணங்களுள் ஒருவகைத்தான செப்புப்பட்டையங்களுக்குப் பொறுப்பான அமைச்சனாக விருந்தானென்றும் செகராசசேகரமாலை சொல்கின்றது. பாண்டி நாட்டுச் செல்விருக்கை நாட்டிலுள்ள ஆரியச் சக்கரவர்த்திகள் பற்றிய கல்வெட்டுக்கள் தரும் குறிப்புகளும் செகராசசேகரமாலை சொல்வனவற்றிற்கு ஆதாரமாயுள்ளன. ஆரியச்சக்கரவர்த்தி குலத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் பாண்டியரின் படைத் தலைவர்களாகவிருந்து போர்களிலே தாம் ஈட்டிய அரிய சாதனைகளின் பயனாக தனிநின்று வென்ற பெருமாள், தெய்வச் சிலைப்பெருமாள் என்ற புகழ்மிக்க விருதுகளைப் பெற்றிருந்தனரென்பதை இக் கல்வெட்டுக்கள் வாயிலாக அறியலாம். எனவே சிங்கையாரியர் பற்றிய இலக்கியச் சான்றுகளையும் ஆரியச் சக்கரவர்த்திகளைப் பற்றிய இலக்கிய சாசன ஆதாரங்களையும் ஒப்பிட்டு நோக்குமிடத்து சிங்கையாரியன் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் விருதுகளைப் பெற்றிருந்த யாழ்ப்பாண மன்னரின் முன்னோர்கள் 13 ஆம் நூற்றாண்டிலே குறிப்பாக மாறவர்மன் குலசேகரனின் ஆட்சிக் காலத்தில் (1268 – 1310) தளபதிகளாகவும் அமைச்சராகவும் சேவை புரிந்தனரென்றும் அவர்களிலொருவன் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முடிவில் ஈழம் மீது படையெடுத்து வந்து வட இலங்கையிலுள்ள பாண்டியராதிக்கத்திற்குள் அமைந்த தனியரசில் ஆட்சியதிகாரத்தைக் கவர்ந்து கொண்டானென்றுங் கொள்ளவேண்டும்.

## கைலாயமாலை

### யாழ்ப்பாண அரசுக்கோர் தலைநகர் – நல்லூர்

யாழ்ப்பாணப் பட்டினம் என வழங்கிய தழிழரசின் தலைநகர் எங்கிருந்தது? அது யாரால் அமைக்கப்பெற்றது? என்பன பற்றி மாறுபாடான கருத்துகள் நிலவி வருகின்றன. சிங்கள நூல்கள் யாவும் ஆரியச் சக்கரவர்த்தி யாப்பாபட்டுன என்னும் நகரிலிருந்து ஆண்டான் என்று கூறுகின்றன. சிங்கள நூல்களில் யாப்பாபட்டுன என வருவது தமிழாதாரங்களில் யாழ்ப்பாணம் என வரும் நகரமே.

ஆரியச் சக்கரவர்த்திகள் சிங்கை நகரிலிருந்து ஆண்டனரென்று சில தமிழ் நூல்கள் கூறுகின்றன. ஆரியச் சக்கரவர்த்தியைச் சிங்கையாதிபன் சிங்கைகாவல் மன்னன் எனத் தக்ஷண கைலாச புராணம் குறிப்பிடுகின்றது. இதே போல செகராச சேகரமாலை, செகராசசேகரம் ஆகிய விரு நூல்களும் முறையே சிங்கையெங் கோமான் எனவும் சிங்கைமேவுமாரியர் கோன் எனவும் யாழ்ப்பாண மன்னனை வர்ணிக்கின்றன. பதினைந்தாம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் வாழ்ந்த அரிகேசரி பராக்கிரமபாண்டியனின் பட்டயமொன்றிலும் யாழ்ப்பாணத்து அரசன் சிங்கை மன்னனென்றே கூறப்பெற்றுள்ளான். ஆகவே ஆரியச்சக்கரவர்த்திகளின் தலைநகர் சிங்கை நகரென வழங்கிற்றென்பது தெளிவாகும். இம்மன்னர் சிங்கை நகரிலிருந்து ஆட்சி புரிந்தமையாலே சிங்கையாரியர் எனவும் வழங்கலாயினர்.

போர்த்துக்கேயர் வட இலங்கையைக் கைப்பற்றிக் கொள்வதற்கு முந்திய காலத்தில் ஒன்றரை நூற்றாண்டுகளாக யாழ்ப்பாண மன்னர்கள் நல்லூரிருந்தே ஆட்சி புரிந்தனர். போர்த்துக்கேய நூல்களும் யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்களும் சங்கிலி முதலிய அரசர்கள் நல்லூரிலிருந்தே ஆண்டனரென்பதை உறுதிப்படுத்துகின்றன. மேலும் யாழ்ப்பாண மன்னர் நல்லூரிலிருந்து ஆண்டதற்குச் சான்றாகச் சில கட்டட அழிபாடுகளும் இடப்பெயர்வுகளும் உள்ளன. எனினும் சிங்கை நகரென வழங்கிய நகரம் வல்லிபுரமெனவும் அங்கிருந்தே செண்பகப் பெருமாளின் படையெடுப்பு வரை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆண்டனர் எனவும் பின் செண்பகப்பெருமாளே நல்லூரில் இராசதானியை அமைப்பித்தான் எனவும் முதலியார் இராசநாயகம் எழுதியுள்ளார். இக் கருத்தையேற்ற சுவாமி ஞானப்பிரகாசர் மேல்வருமாறு கூறுகின்றார்.

ஆதி ஆரியச் சக்கரவர்த்தி எடுப்பித்த யாழ்ப்பாண நகர் யாது? அது நல்லூராதல் கூடுமா! கூடாது என்பர் ஸ்ரீ இராசநாயக முதலியார். இவ்வியுற்பத்தி மானின் அனுமானப்படி பருத்தித்துறைக்கணித்தாய் மணல் மேடுகள் பொருந்தியிருக்கின்ற வல்லிபுரமே பூர்வகாலச் சிங்கை நகரம். நல்லூர் புவனேகுபாகு என பிற்படக் கோட்டை இராச்சியம் வகித்த செண்பகப் பெருமாள் 15ஆம் நூற்றாண்டில் கட்டுவித்ததாம்.

இம் மதம் எமக்கும் சம்மதம். வல்லிபுர மணற்கும்பிகளுள் காற்றுக்காலங்களில் அகப்படும் பழம்பொருட்கள் அங்கு பல இடங்களில் குவிந்து கிடக்கின்றன. பூர்வ கால கலவோடுகள் கீச்சுக்கிட்டம் ஆதி எனவும் அங்கிருந்து தரை மார்க்கமாய் போன பெரும் வீதியின் அடையாளங்

பேராசிரியர்
சி.பத்மநாதன்

களும் அது ஒரு நாள் விஸ்தார நகராய் விளங்கியது என கரதலமாய்க் காட்டும்.

சிங்கை நகர் பற்றி முதலியார் இராசநாயகம் ,சுவாமி ஞானப்பிரகாசர் ஆகிய இருவரும் சொல்வன முற்றிலும் பொருத்தமற்றவை. வல்லிபுரத்தில் காணப்படும் கலவோடுகளும் மட்பாண்டங்களும் வல்லிபுரமே ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் தலைநகராய் இருந்ததென்பதற்கு ஒரு வகையிலும் சான்றாக மேலும் ஒரு தலைநகரின் அழிபாடுகள் எனக் கொள்ளக்கூடிய கட்டட அழிபாடுகள் அங்கு காணப்படவில்லை. முன்கண்டவாறு 14,15 ஆம் நூற்றாண்டு களைச் சேர்ந்த சிங் கள நூல்கள் யாவும் ஆரிய சக்கரவர்த்தி யாப்பா பட்டுன எனும் நகரிலிருந்து ஆண் டான் என்று கூறுகின்றன. (தொடரும்)

# வருடாந்தம் வீதி விபத்துக்களால் 2ஆயிரம் பேர்வரை உயிரிழப்பு

(கொழும்பு)

வருடாந்தம் வீதி விபத்துக்களில் சுமார் 2 ஆயிரம் பேர் வரையில் உயிரிழப்பதாக புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

சாரதிகளின் கவனயீனம், மதுப்பாவனை என்பன விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான பிரதான காரணங்கள் என சுட்டிக் காட்டப்படுகின்றது. சாரதிகளின் கவனயீனம் காரணமாக கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

அக்கரைப்பற்று சாகாமம் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதிவிபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவில் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் உழவு இயந்திரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரே உயிரிழந்துள்ளார்.

பொத்துவில் விக்டர் தோட்டத்தைச் சேர்ந்த 25 வயதான ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தம்புள்ள ஹபரனை வீதியில் நேற்று முன்தினம் வாகன விபத்தொன்று இடம்பெற்றது. முச்சக்கர வண்டியொன்றும் வானொன்றும் நேருக்கு நேர் மோதியதால் இடம்பெற்ற இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிழந்துள்ளனர்.

மேலும் தனமன்வில குடாஓயா பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற மற்றுமொரு வாகன விபத்தில் வெளிநாட்டவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (6-3)

## பொதுச் சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்க பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் சங்கத் தலைவர் வி.கே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

# வேலைவாய்ப்புக்காக அரசியல்வாதிகளின் பின் அலையும் காலம் நிறைவடைந்துள்ளது

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வேலைவாய்ப்புக்களிற்காக அரசியல் வாதிகளின் பின்னால் செல்லவேண்டிய காலம் நிறைவடைந்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



தமது கல்வித் தகைமைக்கு ஏற்றவகையில் தொழில் வாய்ப்புக்களைப்பெறக் கூடிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரியந்தலை தங்தேவ பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

விரோத அடிப்படையிலான தேர்தலை மக்கள் முழுமையாக ஏற்கவில்லை என்பதனை நடந்து முடிந்த தேர்தல் மூலம் நன்கு தெரியவந்துள்ளது.

பொய்ப்பிரசாரம் மற்றும் சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களிற்கு மக்கள் கடந்த தேர்தலினூடாக சிறந்த பாடத்தைப் புகட்டியுள்ளனர்.

இதேவேளை நாட்டை மேம்படுத்தும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தமது அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் எதிர்வரும் காலங்களில் அபிவிருத்திப் பணிகள் மேலும் துரிதமாக்கப்படும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)



யாழ்.வட்டு இந்து நவோதய கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் ஒலிம்பிக் சுடரை விளையாட்டுத்துறை தலைவரிடம் கையளிப்பதையும் அருகில் கல்லூரி அதிபர் திருமதி ஜெகதீஸ்வரி அருள்மயம், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்கள் ஆகியோர் நிற்பதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சங்கானைக் கோட்டக்கல்வி பணிப்பாளர் துரைஎங்கரசு வெற்றி பெற்ற வீரர் ஒருவருக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்.2 மணிக்கு அதிபர் க. நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக சமாதான நீதவானும் சட்டத்தரணியுமான பி.ஜெ.அன்ரனி கலந்து சிறப்பிப்பதுடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி பரமேஸ்வரி அன்ரனி வழங்கி கௌரவிக்கவுள்ளார். (6-4)

☼ ☼ ☼

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருச்சி நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வித்தியாசாலையின் ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் கு. இராசநாயகம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் காங்கேசன்துறை கிளை முகாமையாளர் தி.செந்திநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (6-4)

☼ ☼ ☼

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சென்மேரிஸ் மைதானத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ. வேதநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (6-4)

## அறிவித்தல்

(அல்வாய்)

பாராளுமன்றம் 2010 தேர்தல் கடமைகளுக்கான சிற்றூழியர்களை ஈடுபடுத்துவதற்கு தத்தம் அலுவலகங்களில் பணிபுரியும் நிரந்தர சேவையிலுள்ள சிற்றூழியர்களின் விபரத்தினை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன் அனுப்பிவைக்குமாறு உதவித்தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் அறிவித்துள்ளார். (6)

## கட்டாக்காலி மாடுகளால் நெற் பயிர்கள் நாசம்

(பொன்னாலை)

வலி மேற்குப் பிரதேச நெல் வயல்களில் கட்டாக்காலி மாடுகளால் நெற் பயிர்கள் நாசப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளையில் கூட்டம் கூட்டமாக வரும் மாடுகள் நெற்பயிர்களை அழித்து நாசப்படுத்தி வருவதுடன் நெற் குவியல்களையும் முட்டிச் சேதப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டாக்காலிகளாக திரிந்து நெற்பயிர்களை அழித்துவரும் இம் மாடுகளை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-49)

# வலி. மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் புதிய நடைமுறை

## மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை

(பொன்னாலை)

வலி. மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகள் , கடைகள் போன்றவற்றுக்கு முன்னால் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்துவது ,கடை உரிமையாளர்கள் தமது பொருட்களை கடைக்கு முன்னால் வைத்து விற்பனை செய்வது போன்றவற்றுக்கான தடை நேற்று செவ்வாய்க்கிழமை முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக வலி மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது ,

வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தைப் பகுதிகளுக்கு வருவோர் தமது துவிச்சக்கர வண்டிகளை அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிறுத்த வேண்டும்.

இதேபோன்று கடைகளுக்கு முன்னாள் போக்குவரத்தை பாதிக்கும் அளவிற்கு வெளியில் வைத்து பொருட்களை விற்பனை செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந் நடைமுறையானது சபையின் சுழிபுரம்,சங்கானை,வட்டுக்கோட்டை, அராலி போன்ற 20 அலுவலகங்களின் பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்றும் இதை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (6-49)

## இலட்சார்ச்சனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அருள்மிகு அமிர்தபாசினி சமேத சந்திரசேகர் வாரிவனநாதர் சிவன் ஆலய மாசி மக இலட்சார்ச்சனை நிகழ்வு நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதில் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை . 7மணிக்கு விசேட அபிசேகமும் மகா யாக ஹோமப் பூசையும்இடம்பெறவுள்ளது.(4-9)

யாழ்.செய்திகள்

## தொழில் கல்வி பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத் தொழில் அலுவலகத்தின் ஏற்பாட்டில் முறை சார் தொழிலிற்கான தொழில்க் கல்விப் பயிற்சிப் பட்டறை அடுத்த மாதம் 1ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இக் கருத்தரங்கில் கொழும்பு தேசிய தொழில் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

இக் கருத்தரங்கில் கலந்து கொள்பவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் சமூகம் தரமுடியாத பட்சத்தில் உடனடியாக 021 222 2375 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனவும் யாழ் உதவித் தொழில் ஆணையாளர் என்.ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார். (6-4)

## நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை வல்வை ஒன்றியத்தின் 7ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. தலைவராக சூ.சே.குலநாயகம், உப தலைவராக மு.தங்கவேல், செயலாளராக பூ.அகமணிதேவர், உபசெயலாளராக நா. பாலேந்திரன், பொருளாளராக இ.யோகச்சந்திரம் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக திருமதி சாந்தினி திருஞானசுந்தரம், பா.சத்தியமூர்த்தி, இ.சிவா, இ.மதியழகன், இ.ரமேஸ், லோ.நாகராஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (6-4)

## "சலங்கையின் ஜதிகள்" நடன அளிக்கை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற கலைத்தூது அழகியற் கல்லூரியில் நடனம் பயில்கின்ற மாணவர்களின் திறன்களை வெளிக்காட்டும் நிகழ்வாக **சலங்கையின் ஜதிகள்** என்னும் நடன அளிக்கை எதிர்வரும் 28 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

பல்வேறு வகையான நடன நிகழ்வுகளைக் கொண்டு அமையவுள்ள இந்நிகழ்விற்கு அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (6-4)

## இடம்பெயர்ந்த மாணவர்களின் விபரங்களை சமர்ப்பிக்கவும்

(அல்வாய்)

இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களிலிருந்து வந்து நேற்று வரை யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களின் விபரங்களை அவ்வவ் பாடசாலை அதிபர்கள் அவ்வவ் கல்வி வலய திட்டமிடல் பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு யாழ் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (4-19)

# வடமராட்சி கல்விவலய ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான கோலப்போட்டிகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் 2010 இற்கான ஆரம்பக்கல்விப் பிரிவு முன்னோடி வேலைத்திட்டத்தின் கீழ் கோலப் போட்டி நடைபெறவுள்ளது.

இதில் தரம் 1 இற்கு விதைக்கோலமும், தரம் 2 இற்கு பூக்கோலமும், தரம் 3 இற்கு பல்வேறு பூக்களாலான கோலமும், தரம் 4இற்கு பலவர்ண மாக்கோலமும், தரம் 5 இற்கு விரும்பிய கலம்புகோலம் (கழிவுப் பொருட்கள், காய்கள், பழங்கள் ) போன்றவைகளைக் கொண்டு வரைதல் வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இப்போட்டியை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை மட்டத்தில் நடத்தி ஒவ்வொரு தரத்திலும் 2 மாணவர்களின் பெயர் விபரங்களை அடுத்த மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வடமராட்சி வலயக்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் கமலாம்பாள் பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

மேலும் இப்போட்டிகள் வலய மட்டத்திலும் உபமாகாண மட்டத்திலும் போட்டிகள் நடத்தப்படவுள்ளதுடன் இதில் முதல் இரு இடங்களைப் பெற்ற கோலங்களை புகைப்படம் எடுத்து இறுவெட்டாக தயாரித்து மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் வடமாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (4-19)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசத்தின் கட்டைவேலி கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நுணாவில் குளக்கட்டுப் பிள்ளையார் ஆலய பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும் அடுத்த மாதம் 6ஆம் திகதி காலை 8.30 மணிக்கு பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு நுணாவில் பிள்ளையார் ஆலய மகாசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது க்லந்துகொள்ளுமாறு பிரதேச செயலாளர் சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (6-4)

## ஆன்மீக இதழ் அறிமுக விழா

(பொன்னாலை)

கொழுப்பு இராமகிருஷ்ணமிஷன் சமயப் பாடசாலையில் வெளியிடப்படும் ஆன்மீக இதழ் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் சோ.சிவசுந்தரம் தலைமையில் நடைபெற்ற மேற்படி இதழ் அறிமுகவிழாவில் பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா கலந்துகொண்டு ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு பசுப்பாலையும் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (6-49)

# வீதியின் இரு மருங்கிலும் கட்டடங்களை அமைப்போர் பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்கள்

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதியின் இரு மருங்கிலும் குடியிருப்போருக்கும் மற்றும் ஏனையோருக்கும் வீதி ஒழுங்கு விதிகள் தொடர்பான போதிய அறிவின்மையால் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எல்லைக் குட்பட்ட பகுதிகளில் கட்டடங்கள் நிர்மாணித்து வருகின்றனர்.

மேலும் அதனை நிறுத்துமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தும்போது அறிவுறுத்து பவரும் அதனை எதிர்கொள்ளும் பொதுமக்களும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது.

இது தொடர்பாக சட்டவிரோதமான கட்டடங்களை அமைத்திருக்கும் பொது மக்கள், வீதி ஒழுங்கு விதிகளை அறிந்திருப்பின் அவர்களது இத்தகைய நடவடிக்கைகளைத் தவிர்த்து இதனால் தங்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்க முடிவதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களையும் தவிர்க்கலாம் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் சட்ட விரோதமாக செயற்பட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளருக்கு அதிகாரம் உண்டு எனவும் அதனால் இரு தரப்பும் நேரமும் காசையும் உழைப்பையும் மீதப் படுத்துவதுடன் நாட்டை சிறந்த முறையில் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கும் படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கமைய சட்டவிரோத கட்டடங்களை அமைத்திருப்போர் கீழே குறிப்பிட்டிருக்கும் காரணங்களை அதில் குறிக்கப்பட்டிருக்கும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக கடைப்பிடித்து நெடுஞ்சாலைகள் தொடர்பான வேலைகளைத் திறம்படச் செய்து முடிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மீளமைப்பின் பிரகாரம் சொத்துக்கள் விதிகள் 24ஆவதன் பிரகாரம் கட்டட எல்லையை தீர்மானிப்பது சம்பந்தமாக சட்ட நிலவரம் கீழ் காட்டப்பட்டுள்ளது.

1) நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவிற்குள் இருக்கும் "ஏ" வகுப்பு வீதியும் "பி" வகுப்பு வீதியும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது. மேற்குறிப்பிட்டிருக்கும் "ஏ" வகுப்பு வீதியிலும் "பி" வகுப்பு வீதியிலும் கட்டடங்களை அமைக்கும்போது மத்தியிலிருந்து "ஏ" வகுப்பு 15 மீற்றர் (50 அடி) எல்லை வரையிலும் "பி" வகுப்பு 12 மீற்றர் (40 அடி) எல்லை வரையிலும் வீதியின் இரு மருங்கிலும் கட்டடங்களைக் குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் தான் அமைக்க முடியும். இவ்வாறு குறிப்பிடுவதற்காக காரணம் வீதியை அகலப்படுத்தி அமைக்கும் போது மேற்குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டடங்களை கட்டியிருப்பின் அக்கட்டடங்களை அகற்ற வேண்டி ஏற்படுவதனாலும் அக்கட்டட உரிமையாளர் தீமையான விளைவுகளை எதிர் நோக்க வேண்டியிருப்பதனாலும் அதனைத் தவிர்க்கும் நோக்குடனேயே மேற்கொள்ளப் படுகின்றது. இக்கட்டட எல்லை வீதியின் இரு புறமும் அமைந்த அரச அல்லது தனியார் காணிகளுக்கும் பொருந்தும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

2. எல்லை மதில் நிர்மாணிக்கும் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலர் பிரயோகிக்கும் தொழில் நுட்ப அறிவுறுத்தல்களை உரிமையாளரும் பிரயோகித்து வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் அமைத்தால் மட்டுமே வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியைப் பெறலாம். ஆனால் இதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் ஓர் உடன்படிக்கைக்கு வர வேண்டும். அதாவது உரிமையாளருக்கு நட்ட ஈடு எதுவும் வழங்கப்படமாட்டாது என்பதற்கு இணங்கினால் மாத்திரமே அனுமதியளிக்கப்படும்.

*வீதியினைப் பாதிப்புக்குள்ளாக்குவோருக்கும் ஆக்கிரமிப்பு செய்வோருக்கும் எதிராக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியிலாளருக்கு நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் 1988ஆம் ஆண்டு இலக்கம் 5 வீதி அபிவிருத்தி அதிகார சபை விசேட விதிகள் 02 ஆம் விதியின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.*

அதேவேளை இம்மதிலை அமைக்கும் உரிமையாளர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் அல்லது பிரதம பொறியியலாளரிடம் இது தொடர்பான மேலதிக விபரங்களை கட்டாயமாக பெற்றுக் கொள்வது அவசியம். வீதியை அகலப்படுத்தும் போது நாம் ஏற்கனவே குறிப்பிட்டதற்கு இணங்க மதில் உடைக்கப்படுமானால் அதற்கான நட்டஈட்டை வீதி அபிவிருத்தி அதிகாரசபை வழங்காது.

அதன் பிரகாரம் 1988 ஆம் வருடத்தின் முன் இடப்பட்ட கட்டடமாயினும் அப்பேற்பட்ட கட்டடம் புதுப்பிக்கையில் சேர்த்துக் கட்டுதல் அல்லது மாடி அமைத்தலின் போது 24 ஆம் விதியின் கீழ் கட்டட எல்லையை கவனித்தல் மற்றும் அச்சந்தர்ப்பத்தில் கீழே குறிப்பி டப்பட்ட விதி விபரங்களின் 26 ஆவதின் கீழ் வரும் நடைமுறையை கடைப் பிடித்தல் வேண்டும்.

**விதி26**

விதி24 இன் பிரகாரம் சட்ட விரோதமாக கட்டப்பட்ட கட்டட எல்லையை தீர்மானிக்கும் பொருட்டு நிறைவேற்று பொறியியலாளரின் எழுத்து மூலமான அறிவித்தல் மூலம் 7 நாட்களுக்கு குறையாத நாளொன்றில் அல்லது அதற்கு முன் அக்கட்டடம் உடைத்தல் அல்லது அகற்றுதல் செய்யப்பட வேண்டுமென உரிமையாளருக்கு கட்டளையிட வேண்டுமென பொது சொத்துக்கள் விதி 26இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

அப்படியான அறிவித்தல் ஒன்று A படிவத்தில் பூர்த்தியாக்கப்பட்டு இருப்பதுடன் சம்பந்தப்பட்ட கட்டடம் அமைந்துள்ள இடம் சம்பந்தமாக தீர்க்கமான் விபரம் உப பதிவேட்டில் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட கட்டடம் காணப்படும் அத்திவார தளபடத்துடன் சம்பந்தப்பட்ட சட்ட விரோத கட்டட உரிமையாளருக்கு கையளிக்கப்படும்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளருக்கு அறிவித்தலை கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அந்த அறிவித்தல் கையளித்ததும் அகற்றப்படாத சட்ட விரோத குடியிருப்பாளருக்கு எதிராக வழக்கு தொடரப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களை இவ் அதிகாரசபையின் கீழ் குறிப்பிட்டுள்ள அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

நிறைவேற்றுப் பொறியியலாளர் யாழ்ப் பாணம்-0212222590. நிறைவேற்றுப் பொறியியலாளர் பருத்தித் துறை-0212263196.

# சரத் பொன்சேகா சிறையில் சுகபோகம் அனுபவிக்கவில்லை

## அனோமா பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் கூட்டுப்படைத் தலைமை அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகா சிறையில் சுகபோக வாழ்க்கை அனுபவிக்கவில்லை என தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதனை அவரது மனைவி அனோமா பொன்சேகா வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றின்போது குறிப்பிட் டுள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களாக சிறை வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகா சுக போகமாக வாழ்க்கை நடத்துவதாகவும் அவருக்கு உயரிய உபசரனை வழங்கப்படுவதாகவும் செய்திகள் வெளியாகின.

எனினும் இவற்றை முற்றாக நிராகரித்த அனோமா பொன்சேகா தமது கணவரின் உடல் நிலை மிகவும் மோசமாகக் காணப்படு வதாகத் தெரிவித்துள்ளார்.

சிறையில் அதிக வெப்பநிலை மற்றும் ஒவ்வாத தன்மைகளினால் அவரது சுகாதார நிலைமைகளும் நாளுக்கு நாள் மோசமடைந்து காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர் பாரிய அளவில் மன அழுத்தத்துக்கு உள்ளாகி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் அவரது பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் அரசாங்கமே இவ்வாறான போலியான வதந்திகளைப் பரப்பி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6-4)

# மகாசங்கத்தினருக்கும் அரசுக்குமிடையில் பிளவை ஏற்படுத்துவதற்கு ரணில் முயற்சி

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

மகா சங்கத்தினருக்கு இடையில் பிளவை ஏற்படுத்த மேற்கொண்டுவரும் முயற்சிகளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைவிட வேண்டுமென அரசாங்கம் கோரியுள்ளது.

பௌத்த மதத் தேரர்களை விமர்சிக்கும் நடவடிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க கைவிட வேண்டுமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் பௌத்த மதம் பற்றி தெரியா விட்டால் அதனைப் பற்றிப் பேசக்கூடாது எனப் போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியுள்ளார்.

அரசியல் நோக்கங்களுக்காக மரியாதைக்குரிய பௌத்த தேரர்களுக்கு ரணில் அவதூறு ஏற்படுத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகா சங்கத்தினர் பற்றிய கருத்துக்களை



வெளியிடும்போது மிகவும் நிதானமாக வெளியிட வேண்டியது அசியமானதென குறிப்பிட்ட அவர் தன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பௌத்த சீருடை தரித்த நபரைக்கூட இறுதி மூச்சுக்காக போராடிய வேளையில் பண்டாரநாயக்க மரியாதையாகவே அழைத்ததாக தெரிவித்துள்ளார். (6)

# சட்டவிரோதமாக ஓய்வூதிய கொடுப்பனவிலிருந்து அறவிடப்பட்ட பணத்தை வழங்குமாறு உத்தரவு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் அறவீடு செய்யப்பட்ட 50 ரூபா பணம் சகல ஓய்வூதியம் பெறுவோருக்கும் வழங்கப்பட வேண்டுமென 12 ஓய்வூதியம் பெறும் நபர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் தமது ஓய்வூதியக் கொடுப்பனவிலிருந்து 50 ரூபா அறவீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து 12 பேர் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் குறித்த 12 பேருக்கும் அறவீடு செய்யப்பட்ட பணத்தை மீள வழங்குமாறு தீர்ப்பளித்துள்ளது.

அதன்படி குறித்த 12 ஓய்வூதியம் பெறும் நபர்களுக்கும் தலா 50 ரூபா வீதம் வழங்கப் படவுள்ளது.

எனினும் மனுவைத் தாக்கல் செய்தவர்கள் இந்த மனு பொதுநல அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டதாகவும் தனிப்பட்ட ரீதியில் 50 ரூபாவினைப் பெற்றுக்கொள்வதற்காகத் தாக்கல் செய்யப்படவில்லை எனச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே நாட்டில் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளும் 4 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கும் அறவீடு செய்யப்பட்ட ரூபா 50 மீளளிக் கப்படவேண்டுமெனக் கோரியுள்ளனர்.

விடுமுறை விடுதி ஒன்றினை அமைப்பதற்காக எனத் தெரிவித்து 50 ரூபா ஓய்வூதியத்திலிருந்து அறவீடு செய்யப்பட்டதாகவும் பின்னர் அதுதேசியப் பாதுகாப்பு செலவிற் காகப் பயன்படுத்த உள்ளதாகவும் அறிவிக் கப்பட்டிருந்தது.

இந்த மனு மீதான விசாரணைகள் அடுத்த மாதம் 18ஆம் திகதி மீளவும் எடுத்துக் கொள் ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# சைக்கிள்



மாரடைப்புக்கு பிரதான காரணமான இரத்தக் குழாய் அடைப்புகள் வராமல் தடுத்து இதய ஆரோக்கியத்தை காக்கிறது.

பருமனால் பாதிக்கப்பட்டோருக்கு ஊளைச் சதைகளைக் குறைத்து, உடல் எடையைக் கட்டுப்பாட்டில் வைக்க உதவுகிறது. குறிப்பாக தொடைகள், கால்களில் உள்ள அதிக சதையைக் குறைக்கிறது. நீரிழிவையும் இரத்த அழுத்தத்தையும் கட்டுப்பாட்டில் வைக்கிறது. சுவாசக் கோளாறுகளைப் போக்கி, நாள் முழுக்க சுறுசுறுப்பாக வைக்கிறது.

இன்னும் இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். அத்தனைக்கும் காரணம் நாள் தவறாமல் ஜிம்முக்கு போவதோ, உணவுக் கட்டுப்பாடோ இல்லை.

சைக்கிளிங்...! ஆமாம்... ரிக்ஷாவை பின்

## உலகுக்கும் உடலுக்கும் உன்னதம்!

தொடர்ந்து காணாமல் போய்க்கொண்டிருக்கிற சைக்கிள்தான் மேலே சொன்ன அத்தனை ஆரோக்கியத்துக்கும் உத்தரவாதம் அளிக்கிறது!

பாடசாலைப் பருவத்தோடு காணாமல் போய்விடும் வாகனமாகி விட்டது சைக்கிள். பாடசாலை இறுதியில் அல்லது கல்லூரியில் அடியெடுத்து வைக்கிற போது செல்வதை கயே அந்தஸ்தாக நினைக்கிறார்கள் இன்றைய மாணவர்கள்.

பாடசாலைக்குச் செல்கிற மாணவ– மாணவியிடம் சைக்கிள் ஓட்டும் பழக்கத்தை ஊக்கப்படுத்த பிரிட்டனில் சமீபத்தில் ஒரு ஆய்வு எடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி நடந்தோ, பஸ், மோட்டார் சைக்கிள் போன்றவற்றிலோ பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை விட, சைக்கிளில் செல்பவர்களின் ஆரோக்கியம் 30 சதவிகிதம் கூடுதலாக இருப்பது தெரிய வந்திருக்கிறது.

பெண் பிள்ளைகள் விடயத்தில் இந்த சதவிகிதம் இன்னும் அதிகமாம். இளமைப் பருவத்தில் உண்டாகும் உடல் பருமனைக் குறைத்து அவர்களை சரியான எடை மற்றும் வடிவத்தில் இருக்க வைக்கிறதாம் சைக்கிள் ஓடுவது.

வயதும் வசதியும் கூடக் கூட சைக்கிள் ஓடுவதை அந்தஸ்து குறைவான விடயமாகப் பார்க்கிறவர்கள் நமது மண்ணில் அதிகம்.

ஆனால் வெளிநாடுகளில் மிகப் பெரிய அரசியல்வாதியில் இருந்து நடிகர், நடிகைகள், தொழிலதிபர்கள் என பிரபலங்கள் சைக்கிளில் செல்வது சர்வ சாதாரணம்.

ஜோர்ஜ்புஷ், ஹொலிவுட் நடிகர்கள் பிராட் பிட், ரொபின் வில்லியம்ஸ், டைட்டானிக் ஹீரோ லியானர்டோ டி கேப்ரியோ, பியர்ஸ் பிராஸ்னன், மாட்டாமன், நடிகைகள் ஏஞ்சலினாஜோலி, ஜெசுகா ஆல்பா, ஜெனிஃப் பர்அனிஸ்டன் கேட்ஹட்சன், ஜெனிஃபர் லோபஸ், மடோனா, டென்னிஸ் வீராங்கனை அன்னாகோர்னிகா. சைக்கிள் ஓடும் வெளிநாட்டுப் பிரபலங்களின் பட்டியலில் இன்னும் பலர்.

இவ்வளவு ஏன்? ஒபாமாவுக்கு மிகப் பிடித்த பொழுது போக்குகளில் சைக்கிள் ஓடுவதும் ஒன்று.

ஐரோப்பிய நாடுகளில் ஓடுவதை ஊக்கப்படுத்தும் வகையில் கம்யூனிட்டி பைசிக்கிள் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதன்படி பஸ், கார் மாதிரியான் வாகனப் பயணங்கள் தவிர்த்து ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்ல முக்கியமான இடங்களில் மக்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன.

இதன் மூலம் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு சைக்கிளில் செல்லலாம். சென்றடைகின்ற குறிப்பிட்ட இடங்களில் சைக்கிளை நிறுத்தி விட்டுச் செல்லலாம்.

இந்த சைக்கிள் திட்டத்தின் மூலம் சுற்றுச் சூழல் மாசு குறைவதாகவும் போக்குவரத்து நெரிசல் கட்டுப்படுவதாகவும் மக்களின் ஆரோக்கியம் அதிகரிப்பதாகவும் தகவல்.

♦ உலகின் சைக்கிள் நகரம் என்றே சொல்லலாம். நெதர்லாந்தை அந்தளவு சைக்கிள்களின் எண்ணிக்கையால் நிறைந்திருக்கும் நாட்டின் போக்குவரத்து.

♦ வருடத்துக்கு ஒருமுறை சைக்கிள் வாரம் கொண்டாடி சைக்கிள் ஓடுகிறவர்களை ஊக் கப்படுத்தும் நாடு ஸ்பெயின்.

♦ சீனர்களின் ஆரோக்கியம் மற்றும் இளமை இரகசியத்தின் பின்னணியில் சைக்கிள் ஓடும் பழக்கமும் ஒன்று. சைக்கிள் ஓடுகிறவர்களுக்கென தனிப்பாதையை அமைத்துக் கொடுக்கும் அளவுக்கு அங்கே சைக்கிளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் அதிகம்.

♦ வாடகைக்கு சைக்கிள் எடுத்துக்கொண்டு ஊரையே சுற்றிப் பார்க்கிற வசதி பிரான்ஸில் மிகப் பிரபலம். சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க, சைக்கிள் ஓடுபவர்களை ஊக்கப்படுத்த என இதற்குக் காரணமாக சொல்லப்படுகிற விடயங்கள் பல.

♦ வேலைக்குச் செல்பவர்களில் மூன்றில் ஒரு பங்குமக்கள் சைக்கிளில் செல்வதை டென்மார்க்கில் தான் பார்க்க முடியும். காரில் பயணம் செய்தால் வீதியில் இடம்கிடைக்காது என்ற அளவுக்கு சைக்கிள்களின் எண்ணிக்கை இங்கே அதிகம்!

♦ சைக்கிள்களை அழகழகாக அலங்கரித்து, அதில் ஊரின் மூலை முடுக்குகளை எல்லாம் வலம் வருவது அவுஸ்திரேலியாவின் அழகான காட்சி.

♦ பந்தயத்துக்காகவும் ஊரைச் சுற்றவும் சமீப காலமாக சைக்கிளை ஓட்டுவோரின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது ஜேர்மனியில்.

♦ சைக்லோவியா, என்கிற பெயரில் அடிக்கடி சைக்கிள் திருவிழா நடக்கிறது கொலம்பியாவில். சைக்கிள்களின் அணி வகுப்பு நடக்கும் அந்த நாட்களில் கார் உள்ளிட்ட இதர வாகனங்களுக்கு சாலைகளில் நோ என்ட்ரி!

♦ அழகான வீதிகள் அட்டகாசமான சுற்றுச் சூழல் என சைக்கிள் சுற்றுலாவுக்குப் பெயர் போன இடம் நோர்வே. அதனாலேயே சைக்கிள் ஓடுபவர்களுக்கு மிகப் பிடித்தமான இடம் இது என்றும் சொல்வதுண்டு.

♦ பெண்கள் சுயசார்புடன் செயல்பட உதவும் ஒரு சாதனமாகவே பல நாடுகளில் திகழ்கிறது சைக்கிள்.

## சுதந்திர சுதந்திரம்!

சிலி நாடு சுதந்திரம் பெற்று 200 ஆண்டுகள் நிறைவு பெறவுள்ளது. செப்ரெம்பர் 18 ஆம் திகதி 1810 அன்று இம்மக்கள் சுதந்திரம் பெற்றனர்.

200ஆவது சுதந்திர நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாட நாடு முழுக்க பல கேளிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. அதற்கு முன்னோடியாக பினே யாலுனா என்ற நிலா கடற்கரை யில் ஜோடி ஜோடியாக ஆட்டம் போட வந்துள்ளனர் மக்கள். அதுவும் பிறந் தமேனியோடு அவர்கள் பார்வையில் இதுவும் சுதந்திரமே!

## முடிபெடுத்து முடி விற்கிறார்கள்!

ஸ்பெயின் நாட்டில் பெண்களின் தலைமுடிக்கு நல்ல கேள்வி உண்டு. அங்கு பங்குச் சந்தை வீழ்ச்சியால் பல துறைகளும் சரிந்தன. பொருளாதாரம் இப்போது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்தாலும்கூட, பாதிப்பு முழுமையாக விலகவில்லை. இதனால் ஸ்பெயின் பெண்கள் தங்களின் தலைமுடியை விற்றுக் கிடைக்கும் பணத்தில் தேவைகளை ஈடுகட்டுகின்றனர்.

## மெகா நாயகி! பொம்மை அழகு!

கலிவர்ஸ் டிராவல் குழந்தைகளுக்குப் பிடித்த கதைகளில் குறிப்பிடத்தக் கது. பனைமர உயர இராட்சத மனிதன் அதில் ஓர் கதாபாத்திரம். அதைப் போலவே நிஜத்திலும் பல வித்தியாசமான கதை களை அரங்கேற்றி வருகிறது. பிரான் ஸிலுள்ள ராயல் டீலக்ஸ் நாடகக்குழு. 5 அடி உயரமுள்ள அசுரப் பொம்மை களே கதாநாயகர்கள்.

கிரேன் மற்றும் கருவிகள் மூலம் அவற்றைச் செயல்பட வைக்கிறார்கள். சமீபத்தில் சான்டியா கோவில் நடை பெற்ற சர்வதேச நாடகத் திருவிழாவில் இவர்கள் தங்கள் கதாநாயகியை அழகு படுத்துகின்றனர்!

# உலகைச் சுற்றி

AROUND THE WORLD

ஆர்.யூ.பாலமுருகன்

## வெள்ளை வெயில்!


வெள்ளைச் சருமத்தில் மெலனின் குறைவு. அதனால்தான் அவர்களின் சருமம் உஜாலா வெண்மையாக இருக்கிறது. இவர்களை கொசு கடித்தால்கூட அலர்ஜியாகி விடும். இவர்கள் மெலனினை அதிகரிக்க கடலில் நீராடிவிட்டு வெயிலில் சன்பாத் எடுப்பது வழக்கம்.

இனி அப்படிச் செய்ய முடியாது. காரணம்–சரும்ப் புற்றுநோய். வெள்ளைச் சருமத்தினர் வெயிலில் அதிக நேரம் இருந்தால் அது சருமத்தைப் பாதிக்கும் என புற்றுநோய் கவுன்சில் அறிவித்துள்ளது.

இது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த அவுஸ்திரேலியாவின் சிட்னியில் ஆயிரத்து 700 பூத்துவாலைகளை விரித்து வைத்துள்ளனர்.

பூத்துவாலையில் எண்ணிக்கை, புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களைப் குறிக்கிறது.

## துருப் பிடித்தாலும்...



துருப்பிடித்தாலும் சுவிஸ்சர்லாந்தைச் சேர்ந்த ஒருவர் தன் காரை ஆற்றில் தள்ளி விட்டு கைகழுவி விட்டார். 70 ஆண்டுகளுக்கு முன் தண்ணீருக்குள் புதைந்து போன இந்த காரை இப்போது போன்ஷாம்ஸ் ஏல நிறுவனம் கண்டெடுத்துள்ளது.

துருப்பிடித்துப் போன பிரசிகா ரோட்ஸ்டர் வகையைச் சேர்ந்த இந்த காரை 3 கோடியே 51 இலட்ச ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்துள்ளார். பரிஸைச் சேர்ந்த ஆர்வலர்.

## எம்மாம் பெரிய பல்!



இந்தப் பல் டைனோசருடையது போல உள்ளதா? ஆனால் இது மனிதனுடைய பல் என்றால் ஆச்சரியம்தானே ! முன்னொரு காலத்தில் நியாண்டர்தால் மனிதர்கள் ஐரோப்பா, ஆசியா மற்றும் மேற்கு ஆபிரிக்கா பகுதிகளில் அதிகம் காணப்பட்டனர்.

சமீபத்தில் போலந்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஒரு குகையில் இவர்களின் 3 பற்களைக் கண்டுபிடித்துள்ளனர். இவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் கண்டெடுத்தனர். இவை சீசீஸின் பல்கலைக்கழகத் தொல்பொருள் ஆராய்ச்சி மையத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

## கசப்பு பிரமாண்டம்! சிற்ப உணர்வு!

யாருமே யோசிக்க முடியாத அளவில் மிக பிரமாண்டமான சிற்பங்களை அவுஸ்திரேலிய சிற்பி ரான் ம்யூயெக் அமைத்துள்ளார். மெல்பேர்ன் நகரிலுள்ள நேஷனல் கலரி ஆஃப் விக்டோரியாவில் இவரது சிற்பங்கள் உள்ளன. இவை சிலிக்கன் மற்றும் ஃபைபரால் செதுக்கப்பட்டுள்ளன. அச்சு அசலாக ஆஜானுபாகுவாக அமர்ந்து இருப்பது போலவே இச்சிற்பங்கள் தோன்றுகின்றன. நம்மில் பலர் கசப்பான அனுபவங்களோடு வாழ்வதை இச்சிற்பங்கள் உணர்த்துவதாக ரான் கூறுகிறார்.



## மர்மம் விலக்குமா மம்மி?




டோடன் ஹாமன் ... கி.மு. 1341 இல் எகிப்தை ஆண்ட மன்னன். 9 வயதில் முடி சூட்டப்பட்டான். 10 வருடம் மட்டுமே ஆட்சி புரிந்து 19 வயதில் மர்மமான முறையில் மரணமடைந்தான். மன்னனின் கல்லறையை 1922 இல் சுமார் 3000 ஆண்டுகளுக்குப் பின் ஹோவர்ட் கார்டர் என்ற இங்கிலாந்து தொல்பொருள் ஆய்வாளர் கண்டுபிடித்தார்.

கல்லறையில் டோடன் ஹாமன் உடலுடன் விலையுயர்ந்த பொருட்களும் புதைக்கப்படிருந்தன. அவற்றை ஒவ்வொன்றாக அகற்றவே 10 ஆண்டுகள் ஆனது. இப்போது மம்மியைக் கொண்டு மன்னனின் இறப்பு மர்மத்தை ஆய்வு செய்கிறார்கள்.

## சூறாவளி கார்!

உலகில் அதிவேகமாகச் செல்லக்கூடிய டீசல் கார் ஒன்று விரைவில் வீதிகளுக்கு வரவுள்ளது. மும்பை சர்தேச வாகன உதிரிப் பாகங்கள் கண்காட்சியில் பலரது கவனத்தை ஈர்த்தது இந்தக் கார். ஒருவர் மட்டுமே பயணம் செய்யக் கூடிய இந்தக் கார் மணிக்கு 563 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளியாகப் பறக்கும்!



# பொன்சேகாவுக்கு எதிரான விசாரணைகள் இரண்டு வாரங்களுக்குள் ஆரம்பமாகும்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவ பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணைகள் எதிர்வரும் இரு வாரங்களுக்குள் ஆரம்பமாகும் சாத்தியம் காணப்படுவதாக இராணுவத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை அவருக்கு எதிரான சாட்சிகளை நெறிப்படுத்தும் நடவடிக்கை இன்னும் ஓரிரு நாட்களில் நிறைவடையும் என்று இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

அத்துடன் ஜெனரல் பொன்சேகாவுக்கு எதிராக பெருமளவு சாட்சியங்களிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்த இராணுவப் பேச்சாளர் சாட்சிகளை நெறிப்படுத்தும் நடவடிக்கை முடிவடைந்தவுடன் இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைகள் ஆரம்பமாகும் என்றார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது; அரசாங்கத்துக்கு எதிராக சூழ்ச்சி செய்ததை, இராணுவச் சட்டதிட்டங்களை மீறிச் செயற்பட்டமை, ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தினரை படுகொலை செய்வதற்குத் திட்டமிட்டமை மற்றும் ஆயுதக் கொள்வனவில் மோசடி செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் ஜெனரல் பொன்சேகாவுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையிலேயே இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான சாட்சியங்களிடமிருந்து வாக்குமூலங்கள் பதியப்பட்டு சாட்சிகளை நெறிப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சாட்சிகளை நெறிப்படுத்துவதென்பது அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான சாட்சிகளைத் திரட்டி அந்த சாட்சிகளிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்து ஆவணப்படுத்துவதாகும்.

இந்நடவடிக்கை முழுமையடைந்ததன் பின்னரே அவரை இராணுவ நீதிமன்றத்துக்கு அழைப்பதா? இல்லையா? இராணுவத்தின் எந்த சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்று பாதுகாப்புத் தரப்பு தெரிவித்தது. எவ்வாறெனினும் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக இராணுவ நீதிமன்ற விசாரணைகளை எதிர்வரும் இரு வர்ரங்களுக்குள் ஆரம்பிக்க இராணுவத் தரப்பு தீர்மானித்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

# ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என புதிய சிஹல உறுமய கட்சி எச்சரித்துள்ளது. கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கட்சியின் தலைவர் சரத் மனோமேந்திரா இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது 16 கட்சிகள் ஒரே கூட்டணியில் போட்டியிடுவதற்காக கைச்சாத்திட்டது. இது ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்தது அல்ல.

பொதுத் தேர்தலை இல்க்குவைத்தே மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் குறித்த உடன்படிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி மீறியுள்ளது.

எனவே அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஐக்கிய தேசிய கட்சி யானை சின்னத்தில் போட்டியிட தீர்மானித்தமை தமது சுயநலத்தன்மையை எடுத்துக் காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6-4)

# குடியிருப்புக்கள், நீர்நிலைகளை அண்டிய பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைக்கத் தடை

(கொழும்பு)

பொதுமக்கள் வாழும் பகுதிகளையும் நீர்நிலைகள் அமைந்துள்ள பகுதிகளையும் அண்மித்த பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைக்க அனுமதி வழங்கக்கூடாதெனச் சுற்றாடல் மற்றும் இயற்கைவள அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

குடியிருப்புகளும் கைத்தொழிற்பேட்டைகளும் தனித்தனியான பகுதிகளில் அமைய வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது இலங்கையில் பிரதேச சபைகள், சுற்றாடல் அமைச்சின் பிரதேச அலுவலகங்கள் மற்றும் சுற்றாடல் அமைச்சினூடாகத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுவதாக அவர் கூறினார்.


இதனைத் தவிர இலங்கை முதலீட்டுச் சபைகளினூடாகவும் அனுமதி வழங்கப்படுவதாகத் தெரிவித்த அமைச்சர் தொழிற்சாலைக் கழிவுகளால் சுற்றாடல் மாசடைவதாக எவரேனும் முறைப்பாடு செய்தால் அது குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

மேலும் பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும் நீர்நிலைகள் அமைந்துள்ள பகுதிகளிலும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு அனுமதி வழங்கக்கூடாதென்த் தெரிவித்துள்ளதுடன் அதற்கான அனுமதியைப் பிரதேச சபைகள் வழங்கினால் அதற்கு அமைச்சினால் மட்டுமன்றி எவராலும் தீர்வுகாண முடியாது என்று தெரிவித்தார்.

(6-4)

# ஜனாதிபதித் தேர்தலில் மோசடியில் ஈடுபட்டவர்கள் விபரம் விரைவில் தெரியவரும்

## முன்னாள் பா.உ. அர்ஜுன ரணதுங்க



ஜனாதிபதித் தேர்தலில் யார் யார் எந்த அளவு மோசடிகளில் ஈடுபட்டனர் என எதிர்வரும் 26ஆம் திகதி தெரியவரும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் முதலாவது செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தாம் நாடாளுமன்ற உறுப்பினராகும் பதவியை விரும்பவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்களும் சுதந்திரமாக அச்சமின்றி நடமாடக்கூடிய சூழ்நிலை உருவாவதற்குக் காரணமாக இருந்த சரத் பொன்சேகாவே தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் இருந்து கொண்டு அமைச்சராக இருப்பதை விட வீட்டில் அமைதியாக இருந்துவிடுவது மேல் எனத் தோன்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் தற்போது ஜனாதிபதி கடந்த தேர்தலில் மோசடிகள் இடம்பெறவில்லை எனக் கூறிவருகிறார்.

எனினும் எதிர்வரும் 26ஆம் திகதி தாம் சமர்ப்பித்துள்ள வாக்கு மோசடிக்கு எதிரான மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் இந்த மோசடிகளை மேற்கொண்டவர்கள் யார் எனத் தெரியவரும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (6-4)

# நாடு முழுவதும் வெப்பமான காலநிலை நிலவும்; வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் கடும் வெப்பமான ஓர் காலநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வறட்சியான காலநிலை நிலவுவதுடன் எதிர்வரும் மாதத்தில் வெப்பநிலை மேலும் அதிகரிக்கக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

சூரியன் இலங்கைக்கு நேராக உச்சம் கொடுக்க உள்ளதனால் இந்த வெப்பமான காலநிலை நீடிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த வறட்சியான காலநிலை பெரும்போக செய்கைக்கோ அல்லது நாட்டின் மின் விநியோகத்திற்கோ தற்போதைக்குப் பாதிப்பு ஏற்படுத்தாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(6-4)

# த.ம.வி.பு. கட்சி வவுனியாவில் நேற்று வேட்பு மனுத் தாக்கல்

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடும் பொருட்டு நேற்று தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான இக்கட்சியின் வேட்புமனு நேற்றுக் காலை 9.10 மணியளவில் தாக்கல் செய்யப்பட்டதாக தெரிகிறது.

கட்சியின் பொதுச் செயலாளர் எட்வின் சில்வா கைலேஸ்வரராஜா வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

தமது கட்சி பொலன்னறுவ மாவட்டத்திலும் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்யவுள்ளதாக சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது. (6-4)

# பெருவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 38 பேர் பலி

பெரு நாட்டில் இடம்பெற்ற பஸ் விபத்தில் குறைந்தபட்சம் 38 பேர் உயிரிழந்திருக்கக் கூடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு பஸ்கள் மோதிக் கொண்டதனால் இந்த விபத்து இடம்பெற்றதாகவும் இந்த விபத்தில் சுமார் 60இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

பெருவின் தலைநகர் லிமாவிலிருந்து 500 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பான் அமெரிக்கன் பெருந்தெருவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெருவில் அடிக்கடி இவ்வாறான விபத்துக்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாதைகளை அபிவிருத்தி செய்வதற்காக பெருவிற்கு உலக வங்கி 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(6-4)

## இங்கினியாகலவில்

# பொலிசாரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஆற்றில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

இங்கினியாகல பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிசாரால் கைது செய் யப்பட்ட இளைஞர் ஒருவர் சேனாநாயக்க சமுத்திரத்தின் தெற்குப் பகுதி ஆற்றில் சடலமாக மீட்கப்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் அதிகாலை மொரகஹ பள்ளம் பிரதேச மக்கள் பொலிசாருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்கள் டயர்களைக் கொளுத்தியும் கறுப்புக்கொடிகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொகரஹபள்ளம பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதான ஈ.ஏ. சமன் திலகசிறி என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மூன்று பேர் அடங்கிய பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# கட்சித் தாவல்களைத் தடுக்க சத்தியக்கடதாசியில் ஒப்பம்

## ஐ.தே.க. புதிய நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் கட்சி தாவல்களைத் தடுக்கும் வகையில் சத்தியக் கடதாசியில் கையொப்பம் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் 8ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடை நடுவில் வேறு கட்சிகளுக்கு தாவ முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய வேட்பு மனுக்களுக்கு கையொப்பம் இடும்போதே கட்சித் தாவல்களைத் தடுக்கும் சத்தியக் கடதாசியிலும் கையொப்பம் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பின்னர் சில வரப்பிரதாசங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் கட்சித் தாவல்களில் ஈடுபடுவோரைத் தடுக்கும் வகையில் இந்தப் புதிய நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது. (6-4)

# வெளிநாட்டில் பணிபுரிந்து நாடு திரும்புவோரை பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பம்

வெளிநாடுகளில் தொழில் புரிந்துவிட்டு நாடு திரும்பியுள்ள சகல இலங்கையர்களையும் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்று ஒப்பந்தக்காலம் நிறைவடைந்த பின்னர் நாடு திரும்பியுள்ள அனைத்து இலங்கையர்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டு பதிவு செய்யப்படுவதாக பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் அவர்கள் பெற்ற அனுபவம் மற்றும் அவர்களது ஆற்றல் ஆகியவற்றைக் கண்டறிந்து அவர்களை நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்துவதே இதன் நோக்கம் எனப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் வெளிநாடுகளில் அவர்களால் சேமிக்கப்பட்ட பணம் மற்றும் விசேட அனுபவங்களைப் பயன்படுத்தி இங்குள்ள அரச மற்றும் தனியார் துறையினரின் ஒத்துழைப்புடன் முதலீடு செய்வதற்கான வாய்ப்பும் இதன் மூலம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

மேலும் வெளிநாடுகளில் அவர்கள் பெற்ற அனுபவத்திற்கேற்ற பிரதிபலனைப் பெற்றுக் கொடுப்பதும் இந்தத் திட்டத்தின் மற்றொரு நோக்கம் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்ட பின்னர் பணியகத்தின் இணையத்தளத்தில் உள்ளடக்கப்படவுள்ளதுடன் அவர்களது தொழில் அனுபவம், ஆற்றல் ஆகியவற்றுக்கு ஏற்ப உள்ளூர் நிறுவனங்களில் அவர்களைத் தொழில்களில் ஈர்த்துக் கொள்வதற்கான வழிவகைகள் செய்து கொடுக்கப்படும் எனவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பதிவுகள் மாகாண மற்றும் மாவட்டங்களில் இயங்கும் அலுவலகங்கள் ஊடாக மாத்திரமே இலவசமாக இடம்பெறும் எனப் பணியகம் அறிவித்துள்ளது. (6-4)

# பொன்சேகா தரப்பு முன்வைத்த நிபந்தனைகளை ஐ.தே.மு ஏற்க மறுப்பு

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா தரப்பினர் முன்வைத்த மூன்று முக்கிய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என ஐக்கிய தேசிய முன்னணி அறிவித்துள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டணியாக போட்டியிடுவது தொடர்பில் ஜெனரல் சரத் பொன்சேகா தரப்பு முன்வைத்த கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அமையப்பெறவில்லை என ஐக்கிய தேசிய முன்னணி அறிவித்துள்ளது.

பிரதமர் பதவி, கட்சித் தலைமைத்துவம் மற்றும்அமைச்சுப் பதவிகள் தொடர்பில் ஜெனரல் சரத் பொன்சேகா தரப்பினர் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கைகளுக்கு உரிய பதில் அளிக்கப்படாத காரணத்தினால் வெற்றிக் கோப்பை சின்னத்தில் ஜனநாயக தேசிய கூட்டமைப்பில் போட்டியிட ஜெனரல் சரத் பொன்சேகா தீர்மானித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் கோரிக்கைள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கே பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டுமென கட்சி அறிவித்துள்ளது.

(6-4)

# 50 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் இந்தியாவிலிருந்து கடத்தல்

## புலனாய்வுப்பிரிவு விசாரணை

(கொழும்பு)

50 கோடி ரூபா பெறுமதியான ஹெறொயின் போதைப்பொருள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் படகுகளின் மூலம் வடமத்திய கடற்பரப்பின் ஊடாக படகுகளின் மூலம் 125 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் கடத்தப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை 30 கிலோ கிராம் எடையுடைய ஹெறொயின் போதைப் பொருளுடன் அண்மையில் கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளில் 60 கிலோ கிராம் கொழும்பிற்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய வாகன உரிமையாளர்களையும் பொலிஸார் கைது செய்து விசாரித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (6-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## குரக்கன்

Botanical Name-Elusine coracana
Family - Gramineae
Engl - Finger millet
Sinh - Kurakkan

ஏறத்தாழ 60-120 செ.மீ. உயரம் வரை வளரும். ஆண்டுக்குரிய புல்வகைத் தாவரமாகும். இப்பயிர் தண்டின் அடியில் உள்ள சில கணுக்களில் இருந்து மட்டங்களை உற்பத்தி செய்கிறது.

பயிரின் முனையரும்பு விரல்கள் போன்ற அமைப்பிலான பூந்துணராக விருத்தியடைகிறது. பூந்துணரில் உள்ள ஒவ்வொரு சிறுகாம்பிலும் 4-5 வரையான பூக்கள் உண்டு. விதைகள் சிறிய உருளை வடிவில் இருக்கும். இலை செங்கபில நிறமுடையவை.

### பரம்பலும் இனவிருத்தியும்

வளம்குன்றிய மண்ணிலிருந்து வளமான மண்வரை பல்வேறுபட்ட மண்களிலும் இப்பயிரை உற்பத்தி செய்ய முடியும். உவர்த்தன்மையை ஓரளவு தாங்கி வளரக் கூடிய பயிராகும். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

100 கிராம் குரக்கனிலுள்ள சத்துக்கள்:
ஈரலிப்பு (g) 13.1
சக்தி (k.cal) 328
புரதம் (g) 7.3
கொழுப்பு (g) 1.3
காபோவைதரேற்று (g) 72.0
கல்சியம் (mg) 344
பொஸ்பரஸ் (mg) 283
இரும்பு (mg) 6.4
கரோட்டின் (mcg) (மைக்ரோகிராம்) 42
தயமின் (மைக்ரோகிராம்) 420
ரைபோபிளேவின் 190
(மைக்ரோகிராம்)
நியாகின் (mg) 1.1

### மருத்துவ குணங்கள்:

இது எளிதில் செரிக்காது. ஆனால் உடலுக்கு மிகுந்த வலுவைக் கொடுக்கும். உழைப்பாளிகளுக்கு மிகவும் ஏற்றது. இதன் தோல் கழிச்சலை உண்டாக்குமாதலால் இதனை நீர் தெளித்து ஊறவைத்து இடித்து, தோலை போக்கி பலவகை உணவாக, மருந்தாக உபயோகிக்கலாம்.

இம்மாவை தோசை, களி, அடை, கஞ்சி இலைகள் செய்து உண்ண நீரிழிவு குணப்



படும்.

இம்மாவுடன் சிறிது தேன், பால் சேர்த்துக் கூழ்காய்ச்சி அல்லது களி கிளறிக் குழந்தைகளிற்கும் நோயுற்றார்க்கும் கொடுக்க உடல் நலமும் வலிவும் உண்டாகும்.

மாவை களி கிளறிக் கட்டிகளுக்கு வைத்துக் கட்டினால் கட்டி சீக்கிரம் வழுத்துடையும்.

### பிரண்டை கேழ்வரகு காகும்

**தேவையான பொருட்கள்:**
பிரண்டைத் தண்டு - 1 பிடி
நெய் - 2 தேக்கரண்டி
குரக்கன் மா - 250 கிராம்
ஏலக்காய் - 4
சீரகம் 1 தேக்கரண்டி
மிளகுத்தூள் 1/2தேக்கரண்டி
பச்சை மிளகாய் - 4
கறிவேப்பிலை - சிறிதளவு
இஞ்சி - 1 துண்டு
உப்பு தேவையான அளவு
பெருங்காயத்தூள் - சிறிதளவு

பிரண்டை தண்டை (இளசு) எடுத்து சுத்தம் செய்து உமிபோல் நறுக்கி கொள்ளவும். பச்சைமிளகாய், இஞ்சி, கறிவேப்பிலையையும் அதேபோல் நறுக்கிகொள்ளவும்.

குரக்கன். மாவுடன் உப்பு, நறுக்கிய பச்சைமிளகாய், கறிவேப்பிலை, இஞ்சி ஆகியவற்றை கலந்து கொள்ளவும். நறுக்கி வைத்த பிரண்டைத்தண்டை நெய்விட்டு வதக்கி அதையும் மேற்கண்ட கலவையுடன் கலந்து கொள்ளவும். அரைமணிநேரம் கழித்து ரொட்டியாக தட்டி வாட்டி உணவாக பயன்படுத்தலாம்.

நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்த மருந்துணவாகும். அத்துடன் இரத்தத்தையும் விருத்தி செய்யும்.

முள்ளங்கி 100 கிராம், குரக்கன் மா 250 கிராம், உப்பு தேவையான அளவு, மிளகாய் வற்றல் 5, சீரகம் சிறிதளவு எடுத்து மிளகு, சீரகத்தை விழுதாக அரைத்துக் கொள்ளவும். இவையனைத்தையும் குரக்கன் மாவோடு சேர்த்து சப்பாத்திக்கு மாபிசைவது போல் பிசைந்து சப்பாத்தி செய்து சாப்பிட நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்த உப உணவாக இருப்பதுடன் சிறுநீர் எரிச்சல் போன்ற நிலைமைகளிலும் சிறுநீர் நன்கு வெளிப்படல்.

குரக்கன்மா 1 டம்ளர், குறிஞ்சா இலை 5 முதல் 10 இலைகள், கோதுமைமா 1/2 டம்ளர், சின்னவெங்காயம் 100 கிராம், பச்சை மிளகாய் 2 அல்லது 3, சூரியகாந்தி எண்ணெய் 1/4 டம்ளர், உப்பு தேவையான அளவு, தேங்காய்ப்பூ தேவையானால் மட்டும் எடுத்து குரக்கன் மாவையும் கோதுமை மாவையும் மிதமான வெந்நீரில் உப்பு சேர்த்து பிசைந்து கொள்ளவும். பொடியாக நறுக்கிய குறிஞ்சா இலை, வெங்காயம், பச்சைமிளகாய், உப்பு (விரும்பினால் தேங்காய்ப்பூ சேர்த்து நன்றாக பிசைந்து நல்லெண்ணெய் சேர்த்து ரொட்டியாகத் தட்டி எடுத்து மருந்துணவாகப் பயன்படுத்தலாம். இது கட்டுப்பாடான உணவாகும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

### யுரேனியம் செறிவூட்டலுக்காக

# இரு அணு உலைகள் அமைக்க

# ஈரான் திட்டமிட்டுள்ளது

(தெஹ்ரான்)

யுரேனியம் செறிவூட்டுவதற்காக இரண்டு உலைகளை அமைக்க ஈரான் திட்டமிட்டுள்ளது. வான் வழி தாக்குதலைத் தவிர்க்கும் பொருட்டு இவை இரண்டையும் மலைக்குள்ளே அமைக்கப்போவதாக அந்நாடு அறிவித்துள்ளது.

யுரேனியம் செறிவூட்டல் திட்டத்தை ஈரான் கைவிட வேண்டும் என்றும் ஈரானைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாக அமெரிக்க உயர் அதிகாரி டேவிட் பெட்ராஸ் சமீபத்தில் எச்சரித்திருந்தார். ஈரான் தொடர்ந்து இந்த முயற்சியில் ஈடுபட்டால் அதை அமெரிக்கா தகர்க்கும் என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் ஈரானின் அணுவிசை பிரிவின் தலைவர் அலி அக்பர் சலேஹ் இத்தகைய அறிவிப்பை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அடுத்த மாதம் ஈரானிய ஆண்டு தொடங்குவதால் அப்போது இத்திட்டத்தைத் தொடங்குமாறு அதிபர் குறிப்பிட்டுள்ளார். எனவே அடுத்த மாதம் யுரேனியம் செறிவூட்டும் உலை அமைக்கும் பணிகள் தொடங்கப்படும் என்று அவர் கூறினார்.

ஏற்கனவே நதான்ஸில் உள்ள யுரேனியம் செறிவூட்டும் ஆலையின் திறனை ஒத்ததாகவே புதிய ஆலைகளும் அமையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுரேனியத்தைச் செறிவூட்டக்கூடாது என ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து 3 முறை பொருளாதாரத் தடை விதித்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாது செயற்பட்டு வருகிறது ஈரான்.

ஐக்கிய நாடுகள் சபைத் தகவலின் படி நதான்ஸில் உள்ள செறிவூட்டும் மையம் 8610 சென்ட்ரிஃபியூகஸ் திறன் கொண்ட செறிவூட்டு உலையை அமைக்கிறது.

இது சூப்பர்சொனிக் வேகத்தில் செயற்பட்டு யுரேனியத்தை செறிவூட்டும். ஏற்கனவே 3ஆயிரத்து 772 சென்ட்ரிபியூகஸ் திறன் கொண்ட செறிவூட்டும் இயந்திரம் மட்டுமே தற்போது சர்வதேச கண்காணிப்பின் கீழ் செயற்படுகிறது. ஆண்டுக்கு 30 தொன் யுரேனியத்தைச் செறிவூட்டும் திறன் கொண்டதாக ஈரான் விளங்குகிறது. தற்போது 2065 கி.கி. எடையுள்ள குறைவான அளவு செறிவூட்டப்பட்ட யுரேனியம் ஈரான் வசம் இருக்கலாம் என்று சர்வதேச அணுசக்தி முகாமை கணித்துள்ளது.




# ஹெயிட்டியில் பூகம்பத்துக்கு பலியானோர் எண்ணிக்கை 3 இலட்சமாக உயர்ந்தது

(வோஷிங்டன்)

அமெரிக்கா அருகே உள்ள ஹெயிட்டி தீவில் கடந்த மாதம் பூகம்பம் ஏற்பட்டது. இதில் 2 இலட்சம் பேர் பலியானதாக அன்றைய நிலவரப்படி அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு வெளியான போது மீட்புப் பணிகள் நிறைவு அடையாமல் இருந்தது.

மேலும் கட்டடங்களின் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கி பிணமானவர்களின் உடல்களை அகற்றும் பணி சமீபத்தில் தான் முடிவு அடைந்தது.

காயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்தவர்களில் சிலர் சிகிச்சை பலன் அளிக்காமல் பலர் பலியானார்கள். இப்படி இறந்தவர்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தபோது பலியானோர் எண்ணிக்கை அதிகரித்தது.

இந்தப் பூகம்பத்துக்கு 3 இலட்சம் பேர் பலியானதாக அந்த நாட்டின் அதிபர் ரெனே பெர்வால் தெரிவித்தார்.

பூகம்பத்தால் கட்டடங்கள் இடிந்து விழுந்தன. அவற்றை மீண்டும் கட்டுவதற்கு 70 ஆயிரம் கோடி ரூபா தேவைப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (6-4)

# பாகிஸ்தானில் மேலுமொரு தலிபான் தளபதி கைது

(வோஷிங்டன்)

பாகிஸ்தான் நாட்டில் கராச்சி நகரில் பதுங்கி இருந்த தலிபான் இயக்கத்தின் இரண்டாவது தலைவரான முல்லா ஒமர் பராதர் சமீபத்தில் கைதீ செய்யப்பட்டார். பாகிஸ்தான் உளவுத் துறையான ஐ.எஸ்.ஐ. யுடன் சேர்ந்து அமெரிக்க சி.ஐ.ஏ. உளவுத் துறை கூட்டாக நடத்திய சோதனையில் அவர் பிடிபட்டார்.

அவரிடம் நடத்திய விசாரணையில் தலிபான் இயக்கத்தின் மேலும் ஒரு தளபதி பதுங்கி இருந்த இடம்பற்றிய தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து அவர் பிடிபட்டார். அவர் பெயர் மவுல்வி கபீர் என்பது ஆகும். இவர் தலிபான் ஆட்சிக்காலத்தில் நங்காகர் மாநிலத்திள் ஆளுநராக இருந்தவர்.

அமெரிக்காவால் தேடப்பட்டுவரும் 10 தலிபான் தலைவர்களில் ஒருவராக கருதப்படும் இவர் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் உள்ள நவ்ஷெரா மாவட்டத்தில் பதுங்கி இருந்தபோது கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரைத் தொடர்ந்து 2 தலிபான் தலைவர்களும் கைதானார்கள். முல்லா சலாம். முல்லா முகமது ஆகிய 2 பேரையும் பாகிஸ்தான் இராணுவம் கைது செய்தது.

இவர்களில் சலாம் ஆப்கானிஸ்தானில் உள்ள குண்டூஸ் மாநிலத்தைச் சேர்ந்தவர். முகமது பக்லான் மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர்களும் முக்கியமான தலிபான் தீவிரவாதிகளாக கருதப்படுகின்றார்கள். (6-4)



விண்வெளி ஆய்வு மையத்திற்கு 14 நாட்கள் சென்றுவிட்டு அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் நேற்று முன்தின்ம் எண்டவர் விண்கலம் தரையிறங்கியது. அதை நாசா தொழில் நுட்ப கலைஞர்கள் சீர்செய்யும் பணியில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.

# மலேசியாவில் பணிப்பெண்களுக்கு நேரும் கொடுமைகளை தடுக்கப் புதிய திட்டம் நடைமுறை

(கோலாலம்பூர்)


மலேசியாவில் வீட்டு வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும் வேலை தரும் முதலாளிக்கும் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

மலேசியாவில் வீட்டு வேலை செய்ய இந்தோனேசியா, இந்தியா, இலங்கை, கம்போடியா ஆகிய நாடுகளிலிருந்து ஏராளமானவர்கள் வருகின்றனர். வீட்டு வேலை செய்யும் பெண்களை ஏஜமானர்கள் கொடுமைப் படுத்துவதாக அடிக்கடி செய்திகள் வெளியாகின்றன. இதை தடுப்பதற்காக மலேசிய அரசு முதலாளிக்கும் வீட்டு வேலைக்காரர்களுக்கும் சேர்த்து பயிற்சி வகுப்புக்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இது குறித்து மலேசிய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சுப்ரமணியம் கூறியதாவது; மலேசியாவில் வீட்டு வேலை செய்பவர்களை எஜமான்கள் நல்ல படியாகத் தான் நடத்துகின்றனர். ஒரு சதவீதம் பேர் செய்யும் தவறால் மலேசியாவுக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டு விடுகிறது. தோட்டத் தொழில், கட்டுமானப் பணி, ஹோட்டல்களில் பணிபுரிய தமிழகத்திலிருந்து அதிகம் பேர் வருகின்றனர்.

மலேசியாவில் அதிகம் சம்பாதிக்கலாம் என்ற கனவுடன் இவர்கள் வருகின்றனர். இங்குள்ள முதலாளிகள் போதுமான அளவுக்கு சம்பளம் தரவில்லை என்பதையறிந்து அவர்கள் வேதனைக்கு உள்ளாகின்றனர். மலேசியாவுக்கு வேலை செய்ய வருபவர்கள் இங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்ப வேலை செய்யும்படி அறிவுறுத்த அவர்களுக்கும் பணியாளர்களுக்குரிய உரிமைகளை அறிந்து அதற்கேற்ப அவர்களை வேலை வாங்க வேண்டும் என்பதை வலியுறுத்தவும் இருவரையும் அழைத்து பயிற்சி அளிக்கவுள்ளோம்.

அடுத்த மாதம் முதல் இந்த பயிற்சி வகுப்புக்கள் தொடங்கவுள்ளன. மலேசியாவில் வேலைக்கு வந்த ஆறு மாத காலத்தில் இந்த பயிற்சி வகுப்பில் சேர வேண்டும். பணியாளர்களை வேலைக்கு அமர்த்தும் முகவரின் பிரதிநிதிகளும் இந்த வகுப்பில் சேரலாம். இவ்வாறு சுப்ரமணியம் கூறினார். (6-4)



தன் திறமையை வெளிக்காட்டும் தாய்லாந்து இளைஞர்.

# சீனாவின் எலக்ட்ரிக் சைக்கிளுக்கு வெளிநாடுகளில் பெரும் வரவேற்பு

(ஷாங்காய்)

சுற்றுச் சூழலுக்கு உகந்த சீனத் தயாரிப்பான எலக்ட்ரிக் சைக்கிள் மற்றும் பைக் ஐரோப்பாவில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்தியாவிலும் இதன் சந்தை இப்போது அதிகரித்து வருகிறது.

சீனாவில் மின்சாரத்தில் இயங்கும் எலக்ட்ரிக் சைக்கிள் மற்றும் பைக்குகள் கடந்த 20 ஆண்டுகளாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் சீனாவில் சில ஆயிரங்களே இருந்த இந்த வாகனங்கள் இப்போது 12 கோடியாக அதிகரித்துள்ளன.

சீனாவைப் பின்பற்றி ஐரோப்பா, அமெரிக்காவிலுள்ள நிறுவனங்கள் எலக்ட்ரிக் வாகனங்களைத் தயாரிக்கத் தொடங்கிவிட்டன. குறிப்பாக ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் இவற்றுக்குப் பெரும் வரவேற்பு உள்ளது. நெதர்லாந்தில் மூன்று பேரில் ஒருவர் எலக்ட்ரிக் வாகனத்தைத் தான் வாங்குகிறார்.

ஐரோப்பாவைப் போல இந்தியாவிலும் எலக்ட்ரிக் வாகனங்களுக்கு வரவேற்பு அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு ஒரு இலட்சம் வாகனங்கள் விற்பனையாகியுள்ளதாகப் பிரபல ஹீரோ எலக்ட்ரிக் நிறுவன நிர்வாக இயக்குநர் நவீன் முஞ்சால் கூறியுள்ளார்.

இந்த விற்பனை 2012இல் இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்தை எட்டிவிடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். பொதுவாக இரண்டு வகை எலக்ட்ரிக் பைக்குகள் தயாராகின்றன. ஒரு வகை பைக்கில் சைக்கிளில் இருப்பதுபோல் பெடல்கள் இருக்கும். அவற்றை இயக்குவதால் பைக்கில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் இயங்கும். மற்றொரு வகை பைக்கில் பெடல்கள் இருக்கும். ஆனால் அவற்றை எப்போதும் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. சாதாரணமாக முழு சார்ஜ் ஏற்றப்பட்ட ஒரு பைக் ஒரு மணி நேரத்துக்கு 50 மைல்கள் செல்லும். (6-4)

கேவலமான மனிதாய் இருப்பதை விட ஒரு நல்ல குரங்காய் இருக்கலாம்.

~ கிரீஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நாயிற் கடைப்பட்ட நமக்கு 'நாய்' தரும் தொல்லைவினை அறாதோ!

நாடாளுமன்ற தேர்தல் சூடுபிடித்துள்ளது. இலங்கையில் இருக்கக்கூடிய அத்தனை கட்சிகளும் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவது போலத் தெரிகிறது. உயிருக்கு ஆபத்து இல்லை என்ற நிலையில் பலரும் தேர்தல் களத்தில் குதிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

ஏதோ நடந்து முடியட்டும். முந்திப்போய் ஏதேனும் நடந்ததாக இல்லை. இனிப்போய் ஏதேனும் நடக்கும் போலவும் தெரியவில்லை.

எனவே அதே அப்படியே விட்டுவிட்டு, எங்கள் வீதிகளைப் பற்றி சற்றுச் சிந்திப்பது ஆரோக்கியமானதாக இருக்கும்.

இப்போது யாழ்ப்பாண வீதி மனிதர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. ஆடு, மாடு, கோழி, நாய் என அனைத்தினதும் நடமாட்டத்திற்குரியதாக மாறிவிட்டது.

அதிலும் நாய்கள் கூட்டமாக வீதிகளில் நடமாடுகின்றன.

நாய்க்கூட்டத்தின் நடமாட்டம், நாய்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஆர்ப்பாட்டம் செய்வது போல தோன்றுகின்றது. சில இடங்களில் நாய்களின் ஆர்ப்பாட்டத்தால் சர்ச்சை, அடி, தடி, கடி, குலை என்ற ராகதாளம் வாசிக்கப்படுகின்றது.

சில நாய்கள் தங்கள் ஆர்ப்பாட்டத்தையும் மறந்து மோட்டார் சைக்கிள்களில் செல்லும் இளம் பெண்களை துரத்துகின்றன.

எட்டடித்து சாரதிய அனுமதிப்பத்திரம் எடுத்தவர்கள் நாய்த் துரத்தலில் பக்குவமாக வேலிக்குள் விழுந்து பாதுகாப்பு தேடுகின்றனர்.

நிலத்தில் விழுந்து உயிர்ப்பாதுகாப்பு தேடிய எமக்கு நாய் துரத்தலுக்குப் பாதுகாப்பு தேடுவதில் கடினம் இருக்க மாட்டாது. இருந்தும் நாயுடன் மோதி வருபவர்களால் யாழ். போதனா வைத்தியசாலையில் இருபத்து நான்காம் விடுதி டாக்டர்களும் தாதியர்களும் சலித்துக் கொள்கிறார்கள்.

என்ன செய்வது, நாய்களைக் கட்டுப்படுத்துங்கள் என்றால் மாநகர, பிரதேச சபைகள் சிரிக்கின்றன. இவர் 'சிந்தனை' எதுவும் தெரியாதவர் என்பதுதான் அந்த சிரிப்பின் அர்த்தம்.

சிந்தனைக்கு முன்பெல்லாம் ஒழுங்காக நாய்களைக் கட்டுப்படுத்தினீர்களா? என்று கேட்கலாம்.

என்ன பயன்–வீண்வம்பு–தேவையில்லாத பகை. இப்போது எல்லாம் குறைகூறுவதை உரியவர்கள் விரும்புவதில்லை.

இருந்தும் நாய்த்தொல்லையை தாங்க முடியவில்லை. எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் யாரேனும் 'நான் வென்றால் நாய்த்தொல்லையை இல்லாதொழிப்பேன்' என்று உறுதிமொழி வழங்கி னால் கூட எம்.பியாகும் வாய்ப்பு உண்டு.

அந்தளவிற்கு நாயிற் கடைப்பட்ட நம்மை நாய்களே தொல்லைப்படுத்துகின்றன.

# ஐக்கிய தேசியக் கட்சியில் இணையுமாறு ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அழைப்பு

(கொழும்பு)

தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவை தம்முடன் இணைந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார். இந்த அழைப்பு சரத் பொன்சேகாவுக்கு மாத்திரம் இன்றி நாட்டில் ஜனநாயகத்தையும் நிலையான சமாதானத்தையும் முன்னெடுக்க விரும்பும் அனைத்து கட்சிகளுக்குமான அழைப்பு என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சட்ட ஒழுங்குகள் சீர்குலைந்து காணப்படுகின்றன. அரசாங்கமானது தன்னிச்சையான செயற்படுகின்றது. ஊடக சுதந்திரம் என்பது பேச்சுக்கு மேலதிகமான வார்த்தையாக காணப்படுகிறதே தவிர அது அடக்கு முறைகளுக்கு உட்பட்டு கிடக்கிறது. எதிர்க்கட்சிகளின் அலுவலகங்கள் அதிரடியாக சோதிக்கப்படுகின்றன. இந்த நிலையில் அரசாங்கத்தின் இந்த அடாவடித்தனங்களை முற்றாக நிறைவு செய்வதற்கு பலமிக்கதொரு எதிர்க்கட்சியை கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே தம்முடன் இணைந்து எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுமாறு சரத் பொன்சேகாவுக்கு அவரது சட்டத்தரணி ஊடாக செய்தி அனுப்பியுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் சரத் பொன்சேகா சாதகமான பதிலை வழங்குவார் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் பொன்சேகா ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவார் என ஜே.விபியின் பொது செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார். இந்த கூட்டமைப்புக்கு 15 சிறுகட்சிகளின் ஆதரவு கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச–5)

# ஐ.தே.கவின் தீர்மானம் காரணமாகவே மாற்று தீர்மானம் எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அன்னம் சின்னத்தில் களமிறங்குவதற்கே ஜே.வி.பி. எதிர்பார்திருந்தது. ஆனாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானம் காரணமாகவே நாமும் மாற்றுத் தீர்மானம் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஜனநாயகம், தேசிய ஒருமைப்பாடு, மனித உரிமை, நல்லாட்சி மற்றும் பொருளாதாரக் கொள்கை ஆகிய அம்சங்கள் அற்றுப்போயுள்ளமையாலேயே எமது நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையும் இல்லாது போயுள்ளது என்றும் அவர் சொன்னார்.

ஜனநாயக தேசியக் கூட்டணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; ஜே.வி.பியைப் பொறுத்த வரையில் எமது சின்னமான மணி தொடர்பில் நாம் அலட்டிக் கொள்ளவில்லை. ஜனநாயக தேசிய முன்னணியின் பங்காளியாகவே ஜே.வி.பி. இருக்கிறது. எமது கட்சியின் முழு ஆதரவும் ஜெனரல் பொன்சேகா தலைமையிலான முன்னணிக்கு வழங்கப்படும்.

நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்த வேண்டும். நல்லாட்சி உருவாக்கப்பட வேண்டும். யுத்தத்தின் பின்னரான எமது நாடு அபிருத்தியடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலேயே எதிர்க்கட்சிகள் அனைத்தும் பொதுச் சின்னத்தை தேர்ந்தெடுத்தன.

இதில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி, ஜே.வி.பி. உள்ளிட்ட பல கட்சிகள் இணைந்திருந்தன. இது நல்லதொரு மக்கள் சக்தியாக அமைந்திருந்ததுடன் ஊழல் மோசடிகள் நிறைந்த அரசாங்கத்தின் அடக்குமுறை நிர்வாகத்துக்கு எதிரானதாகவும் அமைந்திருந்தது. அரசாங்கத்தின் அடக்குமுறையின் உச்சகட்டமாகவே ஜெனரல் பொன்சேகாவும் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் நின்றுவிடாது அடக்குமுறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

ஊடக அடக்குமுறை மேலோங்கியுள்ளது. இவற்றுக்கெல்லாம் முடிபுகட்ட வேண்டுமெனில் மக்கள் சக்தி அவசியமானதாகும். இந்நிலையில் தான் ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிடுவதென தீர்மானித்துள்ளது.

நாட்டுக்காக இறுதி யுத்தத்தில் பாரிய சேவையாற்றியவரே இன்று சிறைக்குள் இருக்கும் நிலையில் அந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காகவே மாற்று சக்தியொன்று அவசியமாகின்றது என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தவரும் வீதியில் சுதந்திரமாக நடமாடுவதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்தவருமான ஜெனரல் சரத் பொன்சேகா சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கிற நிலையில் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் செல்வதிலோ அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதிலோ எந்தவித அர்த்தமும் கிடையாது என்பதே எனது நிலைப்பாடாகும். அதனைவிட வீட்டிலேயே இருந்து விடுவது மேலாகும்.

எமது தேவையை கருத்தில் கொள்ளாது மக்களின் தேவை கருதியே செயற்படுவது அவசியமாகும். அந்த வகையில் ஜெனரல் பொன்சேகா அதனைச் சரிவர செய்துள்ளார். இதனால் அவரை கௌரவப்படுத்துகின்ற அதேவேளை, அவர் மீது அன்பும் கொண்டுள்ளேன். அதனாலேயே அவரது பயணத்துக்கு உறுதுணையாக இணைத்துள்ளேன் என்றார். (6–4)

# இலங்கை மீனவர்கள் 25 பேர் கைது

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி ஊடுருவி, ஆந்திரா மற்றும் தமிழக கடல் பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 25 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய கடலோரக் காவல் படையின் ரோந்து கப்பலான சாகர் கடந்த 21 ஆம் திகதி ராமையா பட்டணம் அருகே 3 இலங்கை படகுகளையும் மற்றொரு கப்பலான ராணிஜிந்தன், நிஜாம்பட்டணம் கலங்கரை விளக்கம் அருகே 2 இலங்கை படகுகளையும் சுற்றி வளைத்து அந்த படகுகளில் இருந்த மீனவர்களை கைது செய்தது.

அவர்களின் படகுகளும் அதில் இருந்த ஆயிரத்து 595 கிலோ மீன்களும் பறிமுதல் செய்யப்பட்டன. மீனவர்களும் படகுகளுடன் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். இலங்கை மீனவர்களின் படகுகளில் செயற்கை கோள் கருவி, ரேடார் உள்ளிட்ட அதி நவீன தொலைத்தொடர்பு கருவிகளும் இருந்தாக தெரிவிக்கப்படுகிறது. (6–4)

# இலங்கை தமிழர்களுக்கு மனிதாபிமான உதவிகள் அனைத்தும் செய்யப்படும்

## இந்திய ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கைத் தமிழர்களுக்கு மனிதாபிமான உதவிகள் அனைத்தும் செய்யப்படும் என்று இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டில் கூறியுள்ளார்.

பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இரு அவைக் கூட்டத்தில் தொடக்க உரையாற்றிய ஜனாதிபதி பிரதீபா பட்டீல், இலங்கை அரசோடு ஒருங்கிணைந்து செயலாற்றப்படும். இந்தியா, இலங்கை இடையிலான இரு நாட்டு உறவுகள் மேலும் வலுவடையச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அங்குள்ள தமிழர் களுக்கு மனிதாபிமான உதவிகள் அனைத்தும் செய்யப்படும். அவர்களின் மறு வாழ்வுக்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று கூறியுள்ளார். (6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்


## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு



பணம் படைத்தவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இருக்கிறார்களே அவர்களிடம் நம்பிக்கை வைக்கவேண்டாம் . வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை விட செத்துப் போனவர்களாகவே அவர்கள் இருக்கிறார்கள். பணிவும் தாழ்மையும் கொண்டு அதே சமயத்தில் நம்பிக்கைக்கு உரியவர்களுமாகிய உங்களிடம் தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள் திட்டம் எதுவும் தேவையில்லை. அதனால் ஆகப்போவதும் ஒன்றுமில்லை. துன்பத்தால் வாடுகிறவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள். பிறகு உதவிக்காக கடவுளை நோக்குங்கள். உங்களுக்குத் தேவைப்படும் உதவி நிச்சயமாக வந்தே தீரும்.

# நடிகர் ரஜனி, அஜித் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?



திரையுலகம் சார்பில் முதல்வர் கருணா நிதிக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் பல்வேறு விழாக்களில் பங்கேற்க வேண்டுமென நடிகர், நடிகையர் மிரட்டப்படுகிறார்கள் என நடிகர் அஜித் வெளிப்படையாகத் தெரிவித்தார். இதற்கு ரஜனி ஆதரவு தெரிவித்திருந்தார். இதையடுத்து அவர்களுக்கு ஆதரவாகவும் எதிராகவும் விமர்சனங்கள் வெளியாகி வருகின்றன.

இதையடுத்து திரைப்பட சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு இருவர் மீதும் நடவடிக்கை எடுத்துள்ளது. அஜித் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளது. ரஜினிக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அஜித்துக்கு எதிராக கருத்து தெரிவித்த சண்டைப் பயிற்சிக்கலைஞர் ஜாக்குவார்தங்கம் வீடு தாக்கப்பட்டது. தனது வீடு தாக்கப்பட்டதற்கு அஜித்தின் தூண்டுதலே காரணம் என்று பொலிஸாரிடமும் நடிகர் சங்கத்திடமும் ஜாக்குவார்தங்கம் புகார் அளித்துள்ளார்.

இந்நிலையில் நடிகர் சங்கத்தின் செயற்குழு கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி தியாகராஜ நகரில் உள்ள சங்க அலுவலகத்தில் நடக்கிறது. நடிகர் சங்கத்தலைவர் சரத்குமார் தலைமை வகிக்கிறார். பொதுச் செயலாளர் ராதாரவி, துணைத் தலைவர்கள் விஜய்குமார், மனோரமா, பொருளாளர் வாகை சந்திரசேகர், இணை செயலாளர்கள் அலெக்ஸ், செல்வராஜ், கே.என் காளை ஆகியோர் பங்கேற்கிறார்கள் குழு உறுப்பினர்கள் சத்யராஜ், முரளி, எஸ்.வி.சேகர், சூர்யா, மயில்சாமி, சின்னி ஜெயந்த, மும்தாஜ், சத்திய பிரியா, நளினி, பாத்திமாபாபு, குயிலி, நம்பி ராஜன், பூச்சி முருகன் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள்.

கூட்டத்தில் ரஜினி, அஜித் விவகாரம் குறித்து விவாதித்து முடிவு எடுக்கப்படவுள்ளது. (6)

# வன்முறையை கைவிட்டால் மட்டுமே பேச்சுவார்த்தை

## மாவோயிஸ்டுகளுக்கு ப. சிதம்பரம் பதில்

(சென்னை)

மேற்கு வங்கம் உட்பட பல மாநிலங்களில் அதிகரித்து வரும் மாவோயிஸ்டுகள் தாக்குதலை தடுக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

வன்முறையை கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு முன் வர வேண்டும் என்று குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல், மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோர் வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில் நாளை முதல் எதிர்வரும் மாதம் 7 ஆம் திகதி வரை 72 நாள்கள் சண்டையை நிறுத்துவதாக மாவோயிஸ்டுகள் திடீரென அறிவித்தன.

மேலும் பேச்சுவார்த்தைக்கும் தயார் என அறிவித்தது.

மாவோயிஸ்டுகள் சண்டை நிறுத்தம் குறித்து ப.சிதம்பரம் கருத்து தெரிவித் துள்ளார்.

தாக்குதலை நிறுத்தினால் தான் பேச்சுவார்த்தை என்ற மாவோயிஸ்டுகள் நிபந்தனையை ஏற்க முடியாது என்றும் முதலில் அவர்கள் வன்முறையை கைவிட வேண்டும் . பின்னர் பேச்சுவார்த்தைப் பற்றி பரிசீலிக்கலாம் என்றும் கூறினார்.

72 நாட்கள் சண்டை நிறுத்தம் பற்றி மாவோயிஸ்டுகள் முறையான அறிவிப்பை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட பின்னர் பிரதமர் உள்ளிட்டோருடன் பேசிய பிறகே மத்திய அரசின் முடிவை தெரிவிக்க முடியும் என்றும் ப.சிதம்பரம் கூறியுள்ளார். (6)

# பாட்டு பாடும் பட்டுப்புடவை

ஸ்வரம்மதூரி எனும் பெயரில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாட்டுப் பாடும் பட்டு புடவைகள் தென் மாநிலங்களில் பிரபலமடைந்து வருகின்றன.

இதுகுறித்து ஆந்திர மாநிலம் அனந்தபூர் மாவட்டம் தர்மாவரம் பகுதியை சேர்ந்த உடை வடிவமைப்பாளரான பி.மோகன் என்பவர் கூறுகையில்,

பாட்டுப் பாடும் பட்டுப் புடவையில் முந்தானையில் ஐபாட் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

அதில் பதியப்பட்டுள்ள 200 பாடல்கள் 4 மணி நேரங்கள் தொடர்ந்து ஒளிபரப்பாகும். இதற்காக இந்த வகை பட்டுப்புடவையில் 2 ஜி.பி. மெமறி சிப் பயன்படுத்தப்படுகிறது. இரண்டு மாதங்கள் கடினமாக உழைத்து இந்த மொடல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த சேலை உரிமையை பெற்றுள்ள நெசவாளர் பி.தத்தா சிவா கூறியதாவது,

இந்தச் சேலைக்கு ஓடர்கள் வந்த வண்ணமே உள்ளன. ஒரு சேலை உருவாக்க ஒரு மாதம் ஆகிறது. எங்கள் யுனிட்டைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் தொடர்ந்து பணியாற்றி இந்த சேலையை முழுவதுமாக உருவாக்கி உள்ளனர். இதற்கு முன் எல்.இ.டி. கொண்டு ஒளிரும் சேலை உருவாக்கினோம்.

அதே போன்று சந்தனக்கட்டை கொண்டும் முன்னர் பட்டுப்புடவை தயாரித்திருந்தோம். அவற்றிற்கு ஏராளமான ஓடர்கள் வந்தன. ஆனால் நேரமின்மை காரணமாக எங்களால் தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை. இவ்வாறு தத்தா சிவா கூறினார். (6)

# முகாம் மாறி திருமணம் முடிக்கும் அகதி தம்பதிகளுக்கு விடிவுகாலம்

திருமணம் செய்யும் இலங்கை அகதி தம்பதிகள் விரும்பிய முகாம்களுக்கு மாறிக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது.

தமிழகத்தில் 115 முகாம்களில்இலங்கை தமிழர்கள் வசிக்கின்றனர். ஒரு அகதி முகாமில் இருப்பவர் மற்றொரு முகாமில் இருப்பவரை திருமணம் செய்தால் அவர்கள் ஒரே முகாமிற்கு மாற அரசு அனுமதி வழங்குவதில்லை .

இதனால் பெரும்பாலான இளம் தம்பதிகள் திருமணம் முடித்த பின் பிரிந்து வாழும் கட்டாயம் ஏற்பட்டது. நான்கு மாதத்திற்கு முன் விருதுநகர் மாவட்டம் குல்லூர் சந்தை முகாமை சேர்ந்த நாகலெட்சுமிக்கும் சிவகங்கை மாவட்டம் காரையூர் முகாமை சேர்ந்த பாண்டியனுக்கும் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின் இருவரும் சேர்ந்து வாழ முடியாமல் அவரவர் முகாமில் வசித்தனர். சிவகங்கை வந்த அகதிகள் மற்றும் மறுவாழ்வு இயக்குனர் முத்தையாகலைவாணனிடம் இது குறித்து இருவரும் மனு அளித்தனர்.

விசாரித்த அவர் விரும்பிய முகாமிற்கு கணவனோ மனைவியோ மாறிக்கொள்ளலாம் என உத்தரவிட்டார். இந்த உத்தரவு மாநிலம் முழுவதும் அமுலுக்கு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (6)

# உலக மொழிகள் வரலாற்றுக்கு முதன்மையாகத் திகழ்வது தமிழ்

## துணைவேந்தர் இராசேந்திரன்



உலக மொழிகள் வரலாற்றுக்கு முதன்மையாகத் திகழ்வது தமிழ் மொழி என்று தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் ம.இராசேந்திரன் தெரிவித்துள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை சென்னை செம் மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் சார்பில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் திங்கட்கிழமை தொடங்கிய தேசியக் கருத்தரங்கத்துக்கு தலைமை வகித்து அவர் மேலும் பேசியதாவது,

எழுத்துகள் இல்லாத பல மொழிகள் இன்று வழக்கொழிந்து போய்விட்டன. ஆனால் மொழியுடன் எழுத்து வரலாற்றும் தமிழுக்கு உள்ளது. ஒவ்வொரு மொழிக்கும் இலக்கியத்துக்கும் வாழ்வியல் முறையில் நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்றார். (6)

# பிரபாகரனின் மரணத்தை உறுதிப்படுத்த மேலதிக ஆவணங்கள் தேவை

## -இந்தியா கோரிக்கை-

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணத்தை உறுதிப்படுத்த மேலதிக ஆவணங்கள் தேவை என இந்தியா இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்குத் தொடர்பான விசாரணைகளுக்காக இந்த ஆவணங்கள் தேவைப் படுவதாக இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

மரபணு பரிசோதனையின் மூலம் பிரபாகரனின் மரணம் உறுதிப்படுத் தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள ஆவணத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனினும் பிரபாகரனின் உயிரிழப்பு தொடர்பிலான இலங்கையின் ஆவணங்கள் இந்திய நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப் போதுமானதாக அமையவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தையில் பயங்கரவாத ஒழிப்பு குறித்து அதிக கவனம் செலுத்தப்படும்

## இந்திய வெளியுறவு செயலர் பேட்டி

(லண்டன்)

பாகிஸ்தானில் செயல்படும் பயங்கரவாத அமைப்புகளால் இந்தியா கவலையடைந்திருக்கிறது நடைபெறவுள்ள வெளியுறவு செயலர்களின் கூட்டத்தில் பயங்கரவாதத்தை ஒழிப்பது பற்றிய பேச்சுக்களே அதிகமாக இடம் பெற்றிருக்கும் என இந்திய வெளியுறவு செயலர் நிருபமாராவ் தெரிவித்துள்ளார்.

லண்டனில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசியதாவது ,

இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானில் செயல்படும் பயங்கரவாத அமைப்புகளை அழிக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். பாக் . வெளியுறவு செயலர் சல்மான் பஷீருடன் டில்லியில் நடைபெறவுள்ள பேச்சின் போது இது தொடர்பான கருத்துக்கள் வலியுறுத்தப்படும்.

பாகிஸ்தானில் புனிதப் போர் என்றழைக்கப் படும் ஜிகாத்துக்காக சில அமைப்புகள் தயாராகி வருவது கவலை அளிப்பதாக உள்ளது.

பயங்கரவாதிகளை ஒழிக்க சில நடவடிக்கைகளை பாகிஸ்தான் எடுத்துள்ள போதிலும் அது திருப்தி தரும் விதத்தில் இல்லை. இரு நாடுகளுக்கிடையே நடக்கும் பேச்சின் போது பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிப்பது குறித்து அதிக கவனம் செலுத்தப்படும். காஷ்மீர் விவகாரத்தை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். பயங்கரவாத சம்பவங்கள் அதிகரித்துவரும் கால கட்டத்தில் இரு நாடுகளுக் கிடையே பேச்சு நடக்க வேண்டியது அவசியம் . அப்படி இல்லையெனில் மீண்டும் மும்பை சம்பவம் போல் விரும்பத்தகாத சம்பவங்கள் நடக்க வழிவகுத்துவிடும். இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே நல்லுறவு நிலவுவதையே அமெரிக்காவும் விரும்பு கிறது. இவ்வாறு நிருபமா ராவ் தெரி வித்துள்ளார். (6)




# பிரிட்டனில் இந்திய வர்த்தகர் கொலை

(லண்டன்)

பிரிட்டனில் வசிக்கும் இந்திய வர்த்தகர் கொள்ளை கும்பலால் அடித்து கொல்லப்பட்டார்.

பிரிட்டனின் யார்க்ஷயார் பகுதியில் கடை நடத்தி வந்தவர் குர்மெயில் (63) .கடந்த ஞாயிற்றுக்கிழமை இவர் கடையில் புகுந்த நான்கு இளைஞர்கள் கடையில் இருந்த பணத்தை கொள்ளையடிக்க முயன்றனர். இதைத் தடுக்க முயன்ற குர்மெயில் சிங்கை அடித்து காயப்படுத்தியுள்ளனர். தலையில் பலத்த காயமடைந்த குர்மெயில் சிங் சிகிச்சை பலனின்றி இறந்தார்.

கடைக்குள் சத்தம் கேட்பதை கண்ட பொது மக்கள் உள்ளே நுழைந்த போது கொள்ளையர்கள் நான்கு பேரும் தப்பி ஓடிவிட்டனர்.

இது குறித்து இந்த பகுதி பொலிஸார் கொலை வழக்கு பதிவு செய்து தப்பி ஓடியவர்களை தேடி வருகின்றனர். குர் மெயில் சிங் இந்த பகுதியில் எல்லோருக்கும் அறிமுகமானவர், நல்லமனிதர் அவரை கொலை செய்தவர்களை பற்றி தகவல் தர நினைப்பவர்கள் உடனடியாக எங்களை தொடர்பு கொள்ளலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6)

# இந்திய அணியின் வெற்றி தொடருமா? இரண்டாவது ஒரு நாள் போட்டி இன்று

(குவாலியர்)

இந்தியா, தென்னாபிரிக்க அணிகள் மோதும் 2-வது ஒரு நாள் போட்டி இன்று குவாலியரில் நடக்கவுள்ளது. இப் போட்டியில் பங்கேற்கவுள்ள இந்திய, தென்னாபிரிக்க அணி வீரர்கள் நேற்று குவாலியர் மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் ஜெய்ப்பூரில் நடந்த முதல் ஒரு நாள் போட்டியில், ஒரு ஓட்டம் வித்தியாசத்தில் இந்திய அணி திரில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடரில் 1:0 என முன்னிலை பெற்றுள்ளது.

இதனையடுத்து 2-வது போட்டி இன்று குவாலியரில் உள்ள கப்டன் ரூப் சிங் மைதானத்தில் நடக்கவுள்ளது.

**ஆடுகளம் எப்படி?**

குவாலியர், ரூப் சிங் மைதானம் துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது குறித்து ஆடுகளப் பராமரிப்பாளர் அஜய் சஹாராஷ்ரா புத்தே கூறுகையில்,

குவாலியர் ஆடுகளம் கடந்த 2008 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது. கடந்த 2 ஆண்டுகளாக துலீப் தொடர், விஜய் ஹசாரே மற்றும் உள்நாட்டுக் கிரிக்கெட் தொடர்கள் இங்கு நடந்து வருகின்றன.

இங்குள்ள ஆடுகளத்தில் சிறப்பாகத் துடுப்பாட்டம் செய்யும் அணிகள், அதிக ஓட்டங்கள் குவிக்க முடியும். 300 ஓட்டங்களுக்கு மேல் எளிதில் கடக்கலாம் என்றார்.

**நாணயச் சுழற்சி முக்கியமில்லை**

ஆடுகளத்தின் தன்மை குறித்து மத்தியப் பிரதேச கிரிக்கெட் சங்கத் தலைமை மைதானப் பராமரிப்பாளர் சமந்தர் சிங் சௌகான் கூறுகையில்,

ஆடுகளத்தின் தன்மை, போட்டியின் 100 ஓவர்களுக்கும் ஒரே நிலையில் இருக்குமாறு தயார் செய்து வருகின்றோம். இதனால் நாணயச் சுழற்சியில் ஜெயிப்பது முக்கியம் இல்லை.

கடற்கரையை அண்டிய பகுதி என்பதால் 2-வது துடுப்பாட்டம் செய்யும் அணிக்கு நெருக்கடி ஏற்படுவது இயல்பு. ஆனால் தற்போது வானிலை நல்ல நிலையில் உள்ளது. இதனால் பாதிப்பு ஏற்படாது.

மைதானத்தில் உள்ள பனித்துளிகளை நீக்க ஏ.பி.எஸ்.ஏ. 80 என்ற ஸ்பிரே பயன்படுத்தவுள்ளோம். முதல் ஒரு நாள் போட்டி நடந்த ஜெய்ப்பூரில் இதுதான் பயன்படுத்தப்பட்டது. இது நல்ல பலனைத் தருகின்றது என்றார்.

குவாலியர் மைதானத்தில் இது வரை 11 ஒரு நாள் போட்டிகள் நடந்துள்ளன. இங்கு இந்திய அணி 9 போட்டிகளில் விளை யாடியுள்ளது. இதில் 7 வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு இங்கு நடந்த கடைசி ஒரு நாள் போட்டியில் இந்திய அணி, பாகிஸ்தானை வீழ்த்தியது.

**பங்கேற்பாரா சேவாக்?**

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2-வது ஒரு நாள் போட்டியில் இந்திய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சேவாக் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஜெய்ப்பூரில் நடந்த முதல்போட்டியில் முதுகுவலியால் அவதிப்பட்ட இவர், 2-வது பாதியில் களத்தடுப்புச் செய்யவில்லை. இது குறித்து அணி நிர்வாகி ஒருவர் கூறுகையில்,

சேவாக்குக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஸ்கான் செய்து பார்க்கப்பட்டது. ஆனால் காயத்தின் தன்மை பெரியளவில் இல்லை. இதனால் குவாலியர் போட்டியில் சேவாக் பங்கேற்பது சிக்கல் இருக்காது என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

# கல்விப் பணிப்பாளர்கள் இடமாற்றம் ரத்து

(கொழும்பு)

கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.எம்.ஆர்.ஒஸ்வேல்ட் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக, மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வரும் எம்.எஸ்.ரவலும் இட மாற்றம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவர்களின் இட மாற் றங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக ஏ.இராஜேந்திரம் பதவி ஏற்காத நிலையில் வலயக் கல்விப் பணிப்பாளராக முன்பு கடமையாற்றியவரிடம் மீண்டும் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ளது.

(ச-5,14)

# இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்



## கிழக்கு முதலமைச்சர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என கிழக்கு மாகாண முதல் அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்த அவர் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நீண்ட காலத்தின் பின்னர் நான் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளேன். முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இருந்த போது யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தேன். இப்போது யாழ்ப்பாணத்தை பார்த்து மிகவும் சந்தோசமடைகின்றேன். யாழ்ப்பாணம் இப்போது ஓரளவு அபிவிருத்தியடைந்து வருகின்றது. கடந்த யுத்தத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு என்பன பாரிய அழிவை சந்தித்துள்ளமை மிகவும் கவலையாக வுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கிழக்கு மாகாணத்தில் ஆரம்ப காலத்தில் இருந்து செயற்பட்டு இன்று அரசியல் ரீதியாக பலமடைந்துள்ளது.

தற்போதைய சூழலில் எல்லோரும் இணைந்து செயற்படுவதால் ஒருமாற்றம் ஏற்படும். எல்லோரும் எம்முடன் இணைந்து செயற்படலாம். அடிப்படையில் ஒரு முக்கியமான முடிபைக் கொண்டே எமது கட்சி செயற்படுகின்றது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எங்களது கட்சி சார்பாக அதிகளவான உறுப்பினர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு முயற்சி செய்கின்றோம்.

எங்களுடைய முயற்சி வெற்றியளிக்குமாக இருந்தால் கடந்த கால அரசியல் தலைவர்களை விட ஒரு வித்தியாசமானதும் முன் உதாரணமான செயற்பாட்டை செய்வோம், செய்து காட்டுவோம் என நம்புகின்றோம்.

தமிழர்களின் அரசியல் தலைவர்கள் இணைந்து செயற்படுவார்கள் என்பதை நான்நம்பவில்லை. ஏனெனில் அவர்கள் எல்லோரும் மாற்றுக் கருத்துக்களுடன் செயற்படுகின்றனர்.

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். ஆனால் அவர்களுக்கும் எங்களுக்கும் இடையில் மடுவிற்கும் மலைக்கும் இடையிலான பள்ளங்கள் காணப்படுகின்றன.

அவர்கள் தங்களை பழைய முதிர்ந்த அரசியல்வாதிகளாக நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் அரசியலில் முதிர்ச்சியடையவில்லை என்பது எங்களுக்கு கவலையளிக்கின்றது.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தமிழ் அரசியல் கட்சிகள் ஏதாவது ஒரு புள்ளியில் இருந்து செயற்பட வேண்டும்.

தமது மக்களிற்காக எல்லோரும் ஒன்றிணைந்து குரல்கொடுப்பார்களாயின் அது தமிழ் மக்களிற்கு கிடைக்கின்ற வெற்றியாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-7,30)

# உலக கிண்ணம் இடமாற்றம்? இந்தியாவுக்குப் புதிய சிக்கல்

(கிறிஸ்ட்சேர்ச்)

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இந்தியத் துணைக்கண்டத்தில் உலகக் கோப்பை சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நடப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கையில் அடுத்த ஆண்டு உலகக் கோப்பை ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நடக்கவுள்ளது. இந் நிலையில் இந்தியாவில் நிலவி வரும் பாதுகாப்பு அச்சுறுத்தல், உலகின் மற்றைய அணிகளுக்குப் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் உலகக் கோப்பைத் தொடர் திட்டமிட்டபடி இந்தியத் துணைக் கண்டத்தில் நடக்குமா என்பதில் சந்தேகம் நீடிக்கின்றது.

இது குறித்து நியூசிலாந்து கிரிக்கெட் சபைத் தலைவர் ஜஸ்மின் வோன் கூறியதாவது,

இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பாக அச்சுறுத்தல் நிலவி வருகின்றது. இது மேலும் அதிகரித்தால் உலகக் கோப்பைப் போட்டிகளை அங்கு நடத்துவது சிக்கல் ஏற்படும். போட்டிகள் ஆரம்பமாகும் சமயத்தில் வேறு இடத்தைத் தேடிக் கொண்டிருக்க முடியாது.

ஒரு வேளை இத் தொடருக்கான இடம் மாற்றப்பட்டால் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அல்லது தென்னாபிரிக்காவில் நடைபெற அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

கிரிக்கெட்டின் இதயத் துடிப்பே ஆசியா தான். இருப்பினும் போதுமான பாதுகாப்பு இல்லை என்றால் உலகக் கோப்பையில் மற்ற அணி வீரர்கள் பங்கேற்பதில் சிக்கல் ஏற்படும்.

உலகக் கோப்பைப் போட்டிகளை நடத்தும் நாடுகள், போதுமான பாதுகாப்பு உறுதியளிக்க வேண்டும் தவிர அதற்கான திட்டங்களை விளக்கிக் காட்ட வேண்டும். அதற்குப் பின்தான் உலகக் கோப்பையில் பங்கேற் பது குறித்து முடிபு எடுக்கப்படும்.

ஈராக் உள்ளிட்ட உலகின் எந்த நாடாக இருந்தாலும் பாதுகாப்பு உறுதியளித்தால் நியூசிலாந்து அணி பங்கேற்கும். இவ்வாறு வோன் தெரிவித்தார்.

# சுதுமலை ஊடாக போக்குவரத்து சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இருந்து தாவடி-சுதுமலை-மானிப்பாய் வழி ஊடாக மருதனார்மடம் வரை ,வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துச் சேவையொன்று கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் போக்குவரத்துச்சேவை தினமும் காலை மற்றும் பிற்பகல் வேளைகளில் 771ஆம் இலக்க போக்குவரத்து வீதியான யாழ்.நகரில் இருந்து தாவடிச் சந்தி,தாவடிச் சந்தியிலிருந்து சுதுமலை வீதியூடாக மானிப்பாய்,மானிப்பாயிலிருந்து மருதனார்மடம் வரையில் இடம்பெற்றுவருகிறது. (ச-14)



யாழ்.மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கான மரதன் ஓட்டப் போட்டியை நடத்துவது தொடர்பாக நெஸ்ரமோல்ட் நிறுவனத்தினால் நேற்றிரவு பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இம் மாநாட்டில் கலந்து கொண்ட யாழ்.இராணுவக் கட்டளைத் தளபதி, யாழ்.மாநகர சபை மேயர், நெஸ்ரமோல்ட் நிறுவன வெளிவிவகார முகாமையாளர் பந்துல எக்ஸ்ஜோர்ச், இலங்கைத் தடகளச் சங்கப் பொதுமுகாமையாளர் பெரேரா பல்பிட்டிய, வட மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உட்பட்ட அதிகாரிகளையும் ஊடகவியலாளர்கள் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

நகர சபை, யாழ்ப்பாணம்.



# சனத்தொகை கணக்கெடுப்புக்கு சமாதானச் சபை வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையின் வடக்குக் கிழக்கு பகுதியில் சனத்தொகை கணக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டும் என அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்டு இயங்கும் சமாதானம், ஐக்கியம், மனித உரிமைகள் சபை ஒன்று கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்குப்பகுதியில் சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்த கருத்தை நாம் வரவேற்கின்றோம்.

வடக்குக்கிழக்கில் 1981ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் பாரிய வெற்றிகளை பெறக்கூடியதாக இருந்தது எனவும் அச்சபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-3)

## பொன்சேகா...

கொள்ளவில்லை என தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய விசாரணை நீதிபதி ஸ்ரீபவன் உள்ளிட்ட குழுவினரால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொன்சேகாவின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படவேண்டும். மற்றும் அவரது குடும் பத்தினர், உறவினர்கள் பார்வையிடுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக் கையை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டதாக பொன்சேகா தலைமையில் ஆஜரான சட்டத்தரணி கூறினார். (ச-3,5,9)

## தமிழ் காங்கிரஸ்...

இதேவேளை யாழ். மாவட்டத்தில் சுயேட்சைக் குழுக்களாகப் போட்டியிடவுள்ளவர்களையும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸுடன் இணைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவை சாதகமான நிலையிலேயே காணப்படுவதாகவும் தெரியவருகிறது. இது இவ்வாறிருக்க வன்னி மாவட்டத்தில் பிரபல சட்டத்தரணிகள் நால்வர் உட்பட்ட சிலர் அகில இலங்கை தமிழ்காங் கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடவுள்ளனர். (ச-5)

## இந். அரசாங்கத்துடன்...

ஆனால் அவர்கள் கூறுவது போன்று நாம் இந்திய அரசுடன் இணைந்து ஒன்றும் செய்யவில்லை. நாம் கலந்துரையாடிய பின்னர் சிவசங்கர் மேனன் மற்றும் நாராயணன் ஆகியோர் இலங்கைக்கு வந்து போரை நிறுத்துமாறு கூறினார்கள். இலங்கை அரசு அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழர்களின் தன்னாட்சி, சுயநிர்ணயம் போன்ற கோரிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விட்டுள்ளது என்பது பிழையான கருத்து.

தமிழ் மக்களின் சுயநிர்ணய அடிப் படையில் அவர்கள் வாழ்ந்து வந்த தாயகத்தில் பூர ணசுயாட்சி வழங்கப் படவேண்டும் என்பது எமது நிலைப்பாடு. இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என்றார். (ச-9)

## 19 மாவட்டங்களுக்கான...

மாகாணங்களில் இருந்து ஐ.ம.சு. முன்னணி சார்பாக போட்டியிட அதிக அளவில் விண்ணப்பங்கள் கிடைத்தன. இம் முறை தேர்தலில் சகல மாவட்டங்களிலும் புது முகங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

பெண்களுக்கும் கூடுதல் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதோடு ஊடகவியலாளர்கள் மூவரும் போட்டியிடுகின்றனர். இராணுவ வீரர்கள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள், கல்வி மான்கள் போன்றோரும் ஐ.ம.சு. முன்னணி பட்டியலில் அடங்குகின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மற்றும் நுவரேலிய மாவட்டங்களில் எமக்கு குறைவான வாக்குகளே கிடைத்தன. அதனால் அந்த மாவட்டங்களுக்கு பலம் வாய்ந்த வேட்பாளர் குழுவொன்றை நிறுத்த உள்ளோம்.

யாழ். மாவட்டத்தில் புத்திஜீவிகள், மற்றும் பல்துறைகளை சார்ந்த வேட்பாளர் குழு வொன்று நிறுத்தப்படும்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய மாவட்டங்களில் கூடுதலான உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக பலம் வாய்ந்த குழுவொன்றை நிறுத்தியுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-5)

## பொன்சேகா...

தொடர்பாக அரசாங்கம் இது வரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா திருப்தியடையவில்லை. இலங்கையின் சாதாரண சட்டத்தின் அடிப்படையில் தாமதமின்றி பொன்சேகாவிற்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்குமாறு அமெரிக்கா இலங்கை அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியிருந்தது.

பொன்சேகா மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்த எந்தக் கருத்துக்களையும் வெளியிடாத றொபேட் ஓ பிளேக் தான் அது குறித்து அறிந்திருக்கவில்லையெனவும் தெரிவித்துள்ளார். (ச-5)

## யாழில் பாதுகாப்பு நடைமுறை...

நெஸ்ரில் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்றிரவு யாழ்.நகரில் நடைபெற்ற விஷேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30ஆண்டுகள் நடைபெற்ற போர் முடிபுக்கு வந்ததன் பின்பு தென்பகுதி மக்கள் எவ்வாறு சுதந்திரமாக இருக்கின்றார்களோ அதேபோன்று யாழ்ப்பாண மக்களும் இருக்க வேண்டும்.

ஒரேநாடு, ஒரே மக்கள் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்த கொள்கையே என்னிடமும் உண்டு. கடந்த காலங்களில் யாழ்.மாவட்ட மக்கள் பல துன்பங்களை எதிர்நோக்கினர்.

ஆனால் தற்போது சோதனைச் சாவடிகள் நீக்கப்பட்டுள்ளன. அத்துடன் தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலையை அடுத்த வாரம் முதல் பழைய இடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இதனால் முன்பிருந்தது போன்று புற்று நோய் சிகிச்சைப் பிரிவு, உள நல வைத்தியப் பிரிபு என்பன சீராக இயங்கும்.

இதற்குமேலாக உயர் பாதுகாப்பு வலயங்களாகவுள்ள பகுதிகளை படிப்படியாக நீக்கி மக்களை மீள் குடியேற்ற வேண்டும்.

கடந்த 1981ஆம் ஆண்டு நான் பார்த்த பூநகரிக்கும் தற்போதைய பூநகரிக்கும் பாரிய மாற்றமுள்ளது. அது போரினால் அழிவடைந் துள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்திற்கு பெருமளவு தென்பகுதி மக்கள் வருகிறார்கள். எனினும் மொழிப்பிரச்சினைகளால் யாழ்.மக்களை சமாளிப்பது கடினமாகவுள்ளது. அதுமட்டுமே வேறுபாடாகவுள்ளது. எனினும் சமமாகவாழும் போது அவ்வாறான நில்லை ஏற்படாது.

யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திக்கு இராணுவத்தினரால் எவற்றை செய்யமுடியுமோ அதற்கான சகல உதவிகளையும் முழுமையாக வழங்குவேன் என யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

இதேவேளை தெல்லிப்பழை உயர்பாது காப்பு வலயப் பகுதியில் நேற்று முதல் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் இயங்க ஆரம்பித்துள்ளதாகவும், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை கீரிமலை வரையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## தமிழ் மக்கள்...

வதற்காக யாழ்.செயலக அலுவலகத்திற்குள் சென்றிருந்தார்.

பிள்ளையான் காரில் இருந்தவாறே ஊடக வியலாளர்களுக்கு பேட்டியளித்தார். இக்கட்சியின் வேட்பாளராக கந்தையா அருமைலிங்கம் (மட்டக்களப்பு), ரமணி தங்கராசா (கொக்குவில்), முத்துகோணலிங்கம் (கிரான்), சுப்பிர மணியம்பவானி (மட்டக்களப்பு), மனோகரன் சிறிகரன் (தன்னாமுனை), சித்திரவேல் சிவானந்தி (நாவற்காடு), நல்லசேகரம் சரோஜாதேவி (மட்டக்களப்பு), தினகரன்பிள்ளை பிரஜித் (ஆரையம்பதி), பூபாலப்பிள்ளை ஹரிதாஸ் (மட்டக்களப்பு), சுப்பிரமணியம் யோகநாதன் (மட்டக்களப்பு), வடிவேல் ரமேஸ்குமார் (கண்ணன்குடா), சுந்தரராஜா சௌந்தரராஜா (உடபுசல்லாவ) ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர். (ச-7,30)

## யா/திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை
## இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2010

காலம்: 25.02.2010 (வியாழக்கிழமை)
நேரம்: பிற்பகல் 2.30 மணி
இடம்: பாடசாலை மைதானம்

பிரதம விருந்தினர்கள்

திரு. கே.மகேந்திரன் (Programme Manager, Save the Children Sri Lanka-Jaffna)

திருமதி தர்ஷினி மகேந்திரன் (Programme Officer, Christian Aid)

சிறப்பு விருந்தினர்கள்

திரு. சீ.வைகுந்தசாமி (ஓய்வுபெற்ற அதிபர், திருநெல்வேலி இ.த.க.பாடசாலை)

திரு. அ.மரியதாஸன் (முன்னாள் அதிபர், திருநெல்வேலி இ.த.க. பாடசாலை)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பா.அ.ச., ப.மா.ச.

(இ)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக, கணித புள்ளி விபரவியற் துறையின் விரிவுரையாளர் கா.கண்ணனின் (UK) அன்புத் தாயார்

**அமரர் காங்கேயநாதன் விமலராணி**

அவர்களின் மறைவையிட்டு எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,
கணிதபுள்ளிவிபரவியற் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(478)

## மரண அறிவித்தல்

### செல்லப்பா பாலகிருஷ்ணன்



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி கிளான் கொடையை வசிப்பிடமாகவும், தற்போது சங்கரப்பிள்ளை வீதி ஆனைக்கோட்டையில் வசித்து வருபவருமாகிய செல்லப்பா-பாலகிருஷ்ணன் 22.02.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-மீனாட்சி தம்பதிகளின் புத்திரனும், கந்தையா, முருகேசம்பிள்ளை, சரஸ்வதி, லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஆவார்.

இவர் பவானி, கோமதி (கனடா), குகன் (உரிமையாளர், B.K மல்ரி சொப் நாச்சிமார் கோயிலடி), முகுந்தன் (முகாமையாளர்-கப்பிற்றல் ஏலயன்ஸ், கணக்கீட்டு ஆசிரியர்) ஆகியோரின் தந்தையும் சக்திவேல், அருணகிரிநாதர் (கனடா), மதிவதனி (ஆசிரியை, உயரப்புலம் அ.மி.த.க. பாடசாலை), பிரதீபா (இலங்கை வங்கி-காங்கேசன்துறை) ஆகியோரின் மாமனாரும் யதுகுலன், குலவேணி, ஹரிகரன், சாருக்ஷன், பிருதுவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.02.2010 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:-
குடும்பத்தினர்.

(இ-4491)


## விற்பனைக்கு

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட

✲ Sanyo ✲ General ✲ Mitchubisi

Aircondition கள் மலிவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

குறிப்பு:- எமது நிறுவனத்தில் Sales/Insulation/Repair/Service செய்து கொடுக்கப்படும்.

விபரங்களிற்கு:

**NEW ASIAN CENTER**

56/15, ஸ்ரான்லி வீதி, (சம்பத் வங்கியருகாமை) யாழ்ப்பாணம்.

T.P.: 071 8561654, 0718872239

(இ-4490)


## யாழ்.மாவட்ட கேபிள் டீவி இயக்குனர்களுக்கான அவசர கலந்துரையாடல்

இடம்: JAFFNA TECHNICAL INSTITUTE இல.45, மணிக்கூட்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் முன்வீதி)

நேரம்: 28.02.2010 காலை 11 மணி

விடயம்:
1) கேபிள் டீவி இயக்குனர்களின் எதிர்கால தொழில் மற்றும் சட்ட ரீதியான பாதுகாப்பு பெறல் சம்பந்தமாக.
2) நவீன தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்
3) மாவட்ட கேபிள் TV இயக்குனர்கள் சங்கம் ஒன்றை நிறுவுதலின் தேவை பற்றிய கலந்துரையாடல்.

உங்கள் நலன் கருதி மேற்படி கலந்துரையாடலுக்கு தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(ஒற்றுமையே உயர்வு தரும்)

மேலதிக தொடர்புகளுக்கு:
N. ஜெயபாலசிங்கம்: 0718561654
T.I. குமார்: 0777710785
T. ஸ்ரீதரன்: 0775284689

(இ-4489)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.02. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.